ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




சனி ❖ நவம்பர். 11, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 39 ❖ ரூ.10




### தொண்டில் தொய்வு இருக்கக்கூடாது என்பதால் வந்துள்ளேன்

# தொண்டை வலி

## மருத்துவர்கள் இந்த வாரம் முழுக்க ஓய்வு எடுக்க சொன்னார்கள். ஆனால் மக்களை சந்திக்காமல் என்னால் இருக்க முடியவில்லை: முதல்வர் ஸ்டாலின்



சென்னை, நவ. 11–

”மருத்துவர்கள் இந்த வாரம் முழுக்க ஓய்வு எடுக்க சொன்னார்கள். ஆனால் மக்களை சந்திக்காமல் என்னால் இருக்க முடியவில்லை. தொண்டை வலி இருந்தாலும் தொண்டில் தொய்வு இருக்கக்கூடாது. அதனால்தான் வந்துவிட்டேன்'' என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

மகளிர் உரிமைத் தொகை 1000 ரூபாய் வழங்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை முதல்வர்ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார். இந்த விழாவில் பேசிய முதல்வர் ஸ்டாலின், ‘‘கடந்த சில தினங்களாக காய்ச்சல் இருந்தது. தற்போது காய்ச்சல் குறைந்துவிட்டாலும் தொண்டை வலி மட்டும் இருக்கிறது. என்னுடைய குரலைக் கேட்கும் உங்களுக்கு நன்றாக தெரியும்.

இந்த வாரம் முழுவதும் ஓய்வில் இருக்க வேண்டுமென என்னுடைய மருத்துவர்கள் அறிவுறுத்தி இருந்தாலும் என்னால் மக்களை சந்திக்காமல் இருக்க முடியாது. தொண்டை வலி

3ம் பக்கம் பார்க்க









# இன்று

**11-11-23**




சக வருடம் 1945 கார்த்திகை 20
கரும்பு சக்கை எரித்த சாம்பல் வெண்ணை கலந்து தடவினால் உதடு வெடிப்பு சரியாகும்

சோபகிருது ஐப்பசி 25 | NOV - SAT சனி | ரபியுல்ஆகிர் 26 | தேய்பிறை 315 / 050

தேய். திரயோதசி 20.18 (மா. 02.18) சித்திரை 51.30 (கா. 02.47) தியாஜ் 08.48 அகஸ் 29.00 மரண 51.30 மேல் அமிர்த. **மாத சிவராத்திரி.**
வள்ளியூர் முருகப் பெருமான் உற்சவாரம்பம். நரக சதுர்த்தசி ஸ்நானம்.
திருஇந்தளூர் பரிமள ரெங்கராஜர் கெருட வாகன உலா.

| நல்லநேரம் | கௌரி ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை: 7.45-8.45 | 12.15-1.15 | 09.00 | 06.00 | 01.30 |
| மாலை: 4.45-5.45 | 9.30-10.30 | 10.30 | 07.30 | 03.00 |

சூலம் : கிழக்கு; பரிகாரம் : தயிர்
துலா லக்கனம் இருப்பு நா. 1 வி. 00
சந்திராஷ்டமம் உத்திரட்டாதி
கரணம் : 12-1.30; சூரிய உதயம் : 6.11

அள்ளிக் கொடுத்தால் சும்மா, அளந்து கொடுத்தால் கடன்

**இராசிபலன்**
மேஷம் - நலம்
ரிஷபம் - ஏமாற்றம்
மிதுனம் - பாராட்டு
கடகம் - நன்மை
சிம்மம் - வரவு
கன்னி - ஓய்வு
துலாம் - கவனம்
விருச்சி - முயற்சி
தனுசு - வெற்றி
மகரம் - ஆக்கம்
கும்பம் - அசதி
மீனம் - உதவி

## சிந்திப்போம்.... செயல்படுவோம்









# இலங்கைக்கு கடத்த முயன்ற போதைப்பொருள் பறிமுதல் போலீசார் அதிரடி

புதுக்கோட்டை , நவ. 11-

தஞ்சாவூர் மாவட்டப் பகுதியில் இருந்து புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினம் வழியாக போதைப்பொருள் பண்டல்கள் கொண்டு செல்லப்பட்டு இலங்கைக்கு கடத்த உள்ளதாக தஞ்சை மாவட்ட போலீசார் புதுக்கோட்டை மாவட்ட போலீசாருக்கு தகவல் கொடுத்திருந்தனர். இந்நிலையில் புதுக்கோட்டை மாவட்ட எஸ்.பி வந்திதா பாண்டேயின் தனிப்படை, எஸ்.ஐ பாலமுருகன் தலைமையிலான போலீசார் நேற்று காலை கோட்டைப்பட்டினத்தில் சோதனை செய்த நிலையில் அங்கிருந்து கிடைத்த ரகசிய தகவலின் பேரில் தஞ்சை மாவட்டத்திலிருந்து புதுக்கோட்டை எல்லை கிராமமான புளிச்சங்காடு கைகாட்டி வழியாக ஒரு பைக்கில் போதைப்பொருள்



பண்டல்கள் கொண்டு வருவதாக தகவல் கிடைத்துள்ளது.

இதன் மூலம் உஷாரான தனிப்படை போலீசார் புளிச்சங்காடு கைகாட்டி விரைந்து வந்து அந்த வழியாக பைக்கில் மூட்டையுடன் வந்த இருவரை நிறுத்தி விசாரித்தபோது முன்னுக்குபின் முரனாக பதில் சொன்னதால் அவர்களிடம் இருந்த மூட்டையை பிரித்து பார்த்தனர். அப்போது அதில் போதைப்பொருள் பண்டல் பண்டலாக இருந்தது தெரிய வந்தது. உடனே அவர்கள் இருவரையும் கைது செய்து அவர்களிடம் இருந்த போதைப்பொருள் பண்டல்கள், பைக் ஆகியவற்றை கைப்பற்றி ஆலங்குடி மதுவிலக்கு காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

மதுவிலக்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் மனமல்லி இருவர் மீது வழக்கு பதிவு செய்த நிலையில் தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டவர்கள் கோட்டைப்பட்டினம் வடக்குத் தெரு சாகுல்ஹமீது மகன் ராஜ்முகமது (33), ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் சங்காரத்தோப்பு பகுதியை சேர்ந்த நல்லதம்பி மகன் நாகேந்திரகுமார் (57) என்பது தெரிய வந்தது. மேலும் இந்த கஞ்சா பண்டல்கள் கடற்கரையிலிருந்து இலங்கைக்கு படகு மூலம் கடத்தப்பட இருந்ததாக கூறியுள்ளனர். இதில் நாகேந்திரகுமார் ஏற்கனவே இலங்கைக்கு பொருட்கள் கடத்திய வழக்கில் சம்பந்தப்பட்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

### தீபாவளி பண்டிகையை முன்னிட்டு

# அறந்தாங்கியில் பைக் கடை திறப்பு விழாவில் வாகன ஓட்டிகளுக்கு இலவசமாக தலைக்கவசம்

அறந்தாங்கி,நவ.11-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி கட்டுமாவடி சாலையில் அறந்தாங்கி இந்திராநகர் பகுதியைச் சேர்ந்த சிவா என்பவரால் புதிதாக தொடங்கப்பட்ட பைக் ஆக்சஸரீஸ் கடையை மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் சண்முகசுந்தரம் திறந்து வைத்தார்.

திறப்பு விழாவை முன்னிட்டு தலைக்கவசம் அணிவதின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கடையின் உரிமையாளர் சாலையில் தலைக்கவசம் அணியாமல்



சென்ற வாகன ஓட்டிகள் சுமார் நூறுக்கும் மேற்பட்டோருக்கு காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையில் விழிப்புணர்வு செய்து தலைக்கவசத்தை இலவசமாக வழங்கினர்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அறந்தாங்கியில் புதிதாக திறக்கப்பட்ட பைக் அக்ஸசரீஸ் கடையின் சார்பில் சாலையில் தலைக்கவசம் அணியாமல் சென்ற வாகன ஓட்டிகளுக்கு திடீரென இலவசமாக தலைக்கவசம் வழங்கிய கடைக்காரருக்கு வாகன ஓட்டிகள் பாராட்டுகளை தெரிவித்தனர்.






# டெல்லியில் மழை : மாசு நீங்கி காற்றின் தரம் சற்றே உயர்ந்தது – மக்கள் நிம்மதி

புதுடெல்லி : நவ. 11,

தலைநகர் டெல்லியில் நேற்று முன்தினம் ஆங்காங்கே மழை பெய்ததால் அங்கு காற்று மாசுபாட்டின் அளவு சற்றே குறைந்துள்ளது. இதனால் நேற்று காலை 7 மணியளவில் டெல்லியில் காற்றின் தரக் குறையீடு 408 என்ற அளவில் இருந்தது. நேற்று முன்தினம் மாலை இதுவே 437 ஆக இருந்தது குறிப்பிடத்தக்கது.

காற்றின் தரக் குறியீடு 0-50 வரையில் இருந்தால், காற்றின் தரம் நன்றாக இருப்பதாக அர்த்தம். அதுவே, அக்குறியீடு 400 – 500 ஆக இருந்தால், காற்று மிகவும் மாசடைந்து இருப்பதாக அர்த்தம். காற்றுமாசு தீவிரமாக உள்ள நிலையில் டெல்லியில் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், இந்திய வானிலை ஆய்வு மையமானது தீபாவளிக்கு முன்னர் டெல்லியில் காற்றின் தரக் குறியீடுகணிசமாக முன்னேறும் என்று கணித்துள்ளது. பரவலான மழைக்கு மிதமான வாய்ப்பிருப்பதாகவும் கூறியது. மேலும், வடமேற்கில் இருந்து தென் கிழக்கு நோக்கி காற்றின் திசை மாறுவதாலும், புதிதாக மேற்கில் ஏற்பட்டுள்ள கலக்கத்தால் வடமேற்கு இந்தியாவில் பயிரிக் கழிவு எரிப்பால் ஏற்பட்டுள்ள புகை கட்டுப்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

பிராந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள முன்னறிவிப்பில் நேற்று, டெல்லி, சோஹானா, ரேவாரி, அவுரங்காபாத், ஹோடால் (ஹரியாணா). பீஜ்நாவர், சகோடி, மீரட், டண்டா,ஹஸ்தினாபுர், சந்த்பூர், தவுராலா, மோடிநகர், கிதோர், அம்ரோஹா ஆகிய பகுதிகளில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகத் தெரிவித்திருந்தது. டெல்லி சுற்றுச்சூழல் அமைச்சர் கோபால் ராய், அதிகரித்து வரும் மாசுபாட்டைச் சமாளிக்க தேசிய தலைநகரில் செயற்கை மழையைத் தூண்ட முயற்சிப்பதாக அண்மையில் தெரிவித்திருந்தார். நவ 20, 21 தேதிகளில் இதற்காக திட்டமிடப்பட்டுள்ள சூழலில் இப்போதைய மழை ஆறுதலாக அமைந்துள்ளது.

# நான் போட்டியிடும் தொகுதி இதுதான் : திருமாவளவன் அறிவிப்பு

கடலூர், நவ. 11-

பாஜகவின் எம்எல்ஏக்கள் அதிமுகவினர் வாக்குகளை பெற்று எம்எல்ஏக்கள் ஆகியுள்ளதால் அவர்களை பாஜக எம்எல்ஏக்கள் என்று சொல்வதைவிட அதிமுக எம்எல்ஏக்கள் என்றே சொல்லலாம் என விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

கடலூர் மாவட்டம், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக விருந்தினர் மாளிகையில் நேற்று முன்தினம் விடுதலை சிறுத்தை கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி. நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். "தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்றுள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சி இந்தியா கூட்டணியை உருவாக்குவதற்காக கடந்த சில ஆண்டுகளாக கணிசமான பங்களிப்பு செய்துள்ளது. இந்தியா வெல்லும், இந்தியா கூட்டணி வெல்லும் என்கிற அடிப்படையில் 'வெல்லும் ஜனநாயகம்' என்ற மாநாட்டை அடுத்த மாதம் டிசம்பர் 23-ம் தேதி திருச்சியில் நடத்த திட்டமிட்டு உள்ளோம்.

அகில இந்திய அளவில் அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒருங்கிணைந்து இந்தியா கூட்டணி வெற்றி பெற வேண்டும் என வலியுறுத்தும் மாநாடாக இந்த மாநாடு இருக்கும். ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில்



20-க்கும் மேற்பட்ட இடங்களில் ஹைட்ரோ கார்பன் கிணறுகளை உருவாக்குவதற்கு மத்திய அரசு முயற்சிக்கிறது. தமிழ்நாடு அரசு இதற்கு அனுமதிக்காத போதிலும் ஓ.என்.ஜி.சி. நிறுவனம் மூலமாக மீண்டும் அதற்குரிய முயற்சிகளை மேற்கொள்வது அதிர்ச்சி அளிக்கிறது.

சிதம்பரம் வட்டத்திலும் சில இடங்களில் ஹைட்ரோ கார்பன் கிணறு அமைக்கும் முயற்சியை ஓ.என்.ஜி.சி நிறுவனம் மேற்கொள்வதாக தெரிகிறது. இந்த முயற்சியை முற்றிலும் கைவிட வேண்டும். சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகம் பணி நிரவல் என்ற பெயரில் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக பேராசிரியர்கள், பணியாளர்கள் வேறு மாவட்டங்களுக்கு தொடர்ந்து மாற்றப்பட்டு வருகின்றனர்.

இந்த நடவடிக்கையை வரவேற்கிறோம். ஆனால் பல்கலைக்கழக நிர்வாகத்தில் எஸ்.சி, எஸ்.டி, பேராசிரியர், பணியாளர்கள் எண்ணிக்கை மிகவும்குறைந்துவருகிறது.அதே நிலைநீடித்தால் அண்ணாமலை பல்கலைக்கழகம் எஸ்.சி, எஸ்டி பேராசிரியர்கள், பணியாளர்கள் இல்லை என்ற நிலை ஏற்படும் அபாயம் உள்ளது.

இது சமூகநீதி கருத்தியலுக்கு எதிரானதா அமையும். எனவே பணிநிரவல் நடவடிக்கை மேற்கொள்ளும் பல்கலைக்கழக நிர்வாகம், சமூக நீதியை கருத்தில் கொண்டு திட்டங்களை மாற்றி அமைக்க வேண்டும். இதனை வலியுறுத்தி வரும் 17ம் தேதி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் சிதம்பரத்தில் நடத்த உள்ளோம்.

அண்ணாமலை நடைபயணத்தில் அ.தி.மு.க, பாமகவைசேர்ந்த தொண்டர்கள் தான் பங்கேற்று வருகின்றனர். அண்ணாமலையோடு நடந்து செல்பவர்கள் பாஜக தொண்டர்கள் இல்லை. தமிழகத்தில் பாஜக எந்த காலத்தில் ஆட்சிக்கு வராது. பாஜகவில் இருக்கும் எம்எல்ஏக்கள் அதிமுகவின் வாக்குகளை பெற்றுத்தான் எம்எல்ஏக்களாகி இருக்கிறார்கள். அதனால் அவர்களை அதிமுக எம்எல்ஏக்கள்என்றேசொல்லலாம். தமிழ்நாட்டில்திமுகவைஎதிர்க்கும் வலுவுடன் அதிமுக தான் உள்ளது.அதைமறுக்கமுடியாது. அண்ணாமலைக்கு பணம் எங்கிருந்து வருகிறது என்று அமலாக்கத்துறை விளக்கம் தருமா?

சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதி எனது சொந்த தொகுதி. இந்த தொகுதியை நேசிப்பவன் நான். எனவே சிதம்பரம் தொகுதியில் மீண்டும் போட்டியிடுவேன்" என்று தொல். திருமாவளவன் தெரிவித்தார்.

# புதுக்கோட்டையில் ஓய்வுபெற்ற போக்குவரத்து ஊழியர்கள் நடத்திய கருப்பு தீபாவளி – கண்டன ஆர்ப்பாட்டம்

புதுக்கோட்டை, நவ.11-

கோரிக்கையை நிறைவேற்றாத மாநில அரசைக் கண்டித்து ஓய்வுபெற்ற போக்குவரத்து ஊழியர்கள் புதுக்கோட்டையில் கருப்பு தீபாவளி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

போக்குவரத்து ஊழியர்களின் நீண்ட நாள் கோரிக்கையான அகவிலைப்படி உயர்வு வரும் தீபாவளிக்கு முன்பாக வழங்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்திருந்தது. ஆனால், கொடுத்த வாக்குறுதிப்படி தீபாவளிக்கு முன்பாக அகவிலைப்படி உயர்வு வழங்க அரசும், போக்கவரத்துக்கழமும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிய அரசைக் கண்டித்து




ஓய்வுபெற்ற போக்குவரத்து ஊழியர்கள் நேற்று மாநிலம் முழுவதும் கருப்பு தீபாபவளி கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

புதுக்கோட்டை அரசுப் போக்குவரத்து பணிமனை முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக்கழக ஓய்வுபெற்றோர் நல அமைப்பு புதுக்கோட்டை மண்டலத் தலைவர் பி.லோகநாதன் தலைமை வகித்தார். பொதுச்செயலாளர் எஸ். இளங்கோவன் கண்டன உரையாற்றினார். சிஐடியு மாவட்டப் பொருளாளர் எஸ்.பாலசுப்பிரமணியன் போராட்டத்தை ஆதரித்துப் பேசினார், கோரிக்கைகளை விளக்கி நிர்வாகிகள் அய்யாத்துரை, சின்னச்சாமி, ஆறுமுகம் உள்ளிட்டோர் பேசினர். பொருளாளர் எம். பாலசுப்பிரமணியன் நன்றி கூறினார்.

# மூங்கில் கட்டைகளை முட்டு கொடுத்து கொண்டு செல்லப்படும் மின்கம்பிகள்


## கண்டுகொள்ளுமா புதுச்சேரி அரசு?

புதுச்சேரி, நவ. 11–

புதுச்சேரி மாநிலம் மங்கலம் சட்டப்பேரவை தொகுதியில் வில்லியனூர் திருக்காஞ்சி வேதவள்ளி நகர், யுவராஜ் நகர், சீதாராமன் நகர் பகுதிகளில் பல வருடங்களாக நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.

அவர்கள் முறையாக வீட்டு வரி, தண்ணீர் வரி ஆகியவற்றை புதுச்சேரி அரசுக்கு செலுத்தி வருகின்றனர். இங்கு குடியிருப்போர் வாக்காளர் பட்டியலிலும் இடம் பெற்றுள்ளனர். ஆனால், இப்பகுதி மக்களுக்கு தேவையான அத்தியாவசியமான மின் இணைப்புகள் தரப்படாத அவலம் நீடிக்கிறது.

இதுதொடர்பாக அப்பகுதி மக்கள் கூறுகையில், "எளிய சாமானிய மக்களான நாங்கள் வங்கிகளில் கடன் பெற்றுத்தான் வீடுகளை கட்டினோம். வீடு கட்டுவதற்கு புதுச்சேரி அரசிடம் கடும் முயற்சி செய்து அப்ரூவல் பெறுகிறோம். அதையும் தாண்டி வீடு கட்ட மின் இணைப்புகள் பெற



அதிகளவு பணம் செலவு செய்யவேண்டியுள்ளது. குறிப்பாக, வீட்டு மின் இணைப்பு பெறுவதற்கு தேவையான மின்கம்பங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 30 ஆயிரம் வழங்கினால் மட்டுமே, எங்கள் பகுதியில் புதிய மின்கம்பங்கள் பொருத்தப்படும் என்கின்றனர். புதுச்சேரி அரசே திட்டமிட்டு இதை செய்கிறது" என்றனர். இதனால், மூங்கில் கம்பங்கள் மூலம் மின்கம்பிகள் கொண்டு செல்லப்படுகின்றன.

இதுபற்றி நாம் தமிழர் தொழிலாளர் நலச்சங்க மாநிலச் செயலாளர் ரமேசு கூறுகையில், "அரசியலில் உள்ள ரியல் எஸ்டேட் அதிபர்கள் பலரும் விளைநிலங்களை வீட்டு மனைகளாக மாற்றி விற்கின்றனர். அவர்கள் விற்பனை செய்யும் வீட்டு மனைகளுக்கு உடனே அப்ரூவல் தரப்பட்டு, குடிநீர் இணைப்பு, சாலை வசதி, மின் இணைப்புகள் வழங்கப்படுகின்றன. அந்தப் பகுதிகளில் மின் கம்பங்களுக்கு இதுபோன்ற சிக்கல்கள் இல்லை. அப்படி இல்லாத இடங்களில் இம்மாதிரியான சிக்கல்களை உருவாக்குகின்றனர். ஒரு அமைச்சர் தொகுதியில் உள்ள இப்பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இதனால் பாதிக்கப்படுவது கண்டிக்கத்தக்கது. இந்த மூங்கில் கம்பங்கள் எப்போதும் சாய்ந்து விழும் நிலையில் உள்ளது. சுமார் 500 பேர் ஆபத்தான சூழலில் வசிக்கின்றனர். மின்துறை அமைச்சர் இதில் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் இப்பகுதியில் சாலை வசதியையும் ஏற்படுத்த வேண்டும்" என்று தெரிவித்தார்.

# மசோதாக்களை கிடப்பில் போடுவது கவலைக்குரியது : தமிழக ஆளுநருக்கு எதிரான வழக்கில் உச்ச நீதிமன்றம் கருத்து

புதுடெல்லி, நவ. 11-

ஆளுநருக்கு எதிராக தமிழக அரசு தொடர்ந்த வழக்கில், ஆளுநரின் செயலாளர் மற்றும் உள்துறை அமைச்சகத்துக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டுள்ள உச்ச நீதிமன்றம், "காலவரையறையின்றி மசோதாக்களை கிடப்பில் போடுவது மிகவும் கவலைக்குரியது" என்று கருத்து தெரிவித்துள்ளது.

மாநில அரசால் அனுப்பப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் காலதமாதப்படுத்தும் தமிழக ஆளுநர் ஆர்.என். ரவியின் செயல்பாடுகளை சட்டவிரோதம் என அறிவிக்க உத்தரவிடக் கோரி உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசின் தரப்பில் அண்மையில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இது தொடர்பாக கடந்த 6-ஆம் தேதி தலைமை நீதிபதி டிஒய் சந்திரசூட் அடங்கிய அமர்வின் முன், தமிழக அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர்களான அபிஷேக் மனு சிங்வி மற்றும் வில்சன் ஆகியோர் ஆஜராகி சில கோரிக்கைகளை முன்வைத்தனர். அதன்படி, தமிழ்நாடு அரசின் மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க உத்தரவிடக் கோரிய ரிட் மனு நவம்பர் 10-ஆம் தேதி விசாரணைக்காக பட்டியலிடப்பட்டது.

இந்நிலையில், ஆளுநர் ரவிக்கு எதிராக தமிழக அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. "மசோதாக்களை கிடப்பில் போட்டு அரசின் செயல்பாடுகளை ஆளுநர் முடக்கி வைக்கிறார். பணி நியமனம் தொடங்கி எந்த ஒரு கோப்புகளுக்கும் அனுமதி கொடுக்க ஆளுநர் மறுப்பு தெரிவிக்கிறார்; கைதிகளை முன்கூட்டியே விடுதலை செய்யும் கோப்புகளைக் கூட கிடப்பில் போட்டு வைத்திருக்கிறார்" என தமிழக அரசு தனது வாதத்தை முன்வைத்தது.

அதையடுத்து, உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான அமர்வு, மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டது. அந்த நோட்டீஸில், 'மக்களின் உரிமைகளை சிதைக்கும் வகையில் ஆளுநர் செயல்படுகிறார்' என்ற தமிழக அரசின் மனுவுக்கு பதிலளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இம்மாதம் 20-ஆம் தேதி வழக்கு மீண்டும் விசாரணைக்கு வரும்போது மத்திய அரசின் அட்டர்னி ஜெனரல் அல்லது அவருக்குப் பதிலாக சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தில் ஆஜராகி விளக்கமளிக்க



வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்றைய விசாரணையின்போது தமிழக அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் ஏ.எம். சிங்வி, பி.வில்சன் ஆகியோர், "ஊழல் வழக்கில் சிக்கியுள்ள அரசு ஊழியர்கள் மீது நடவடிக்கை கோரும் கோப்பு, டிஎன்பிஎஸ்சி நியமனங்கள், சிறைவாசிகளை முன்கூட்டியே விடுதலை செய்வதற்கான ஒப்புதல் கோரும் கோப்புகளைக் கூட ஆளுநர் கிடப்பில் போட்டுள்ளார்" என்று தெரிவித்தனர். வழக்கறிஞர் வில்சன் வாதிடுகையில், "மக்களின் பொது சுகாதாரம் தொடங்கி உயர் கல்வி விவகாரம் வரை எந்தக் கோப்புகளுக்கும், மசோதாக்களுக்கும் ஆளுநர் பதில் அளிக்கவில்லை" என்றார். அப்போது உச்ச நீதிமன்றம், அரசியல் சாசன சட்டப்பிரிவு 200-ன் படி மாநில சட்டப்பேரவைகளில் நிறைவேற்றப்பட்டு ஆளுநரின் ஒப்புதல் கோரி அனுப்பப்படும் கோப்புகள் மீது அவர் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் முடிவு எடுக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருப்பதை சுட்டி காட்டியது.

இதனை இன்னும் விவரித்த தலைமை நீதிபதி சந்திரசூட் கூறுகையில், "ஆளுநர் ஒரு மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கலாம். ஒருவேளை அது நிதி மசோதாவாக இல்லாமல் இருந்தால் முடிவை நிறுத்தி வைக்கலாம் அல்லது அதில் திருத்தம் மேற்கொள்ள பரிந்துரைத்து அரசுக்கு திருப்பி அனுப்பலாம் அல்லது சட்ட மசோதாவை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கலாம். ஆனால், எதுவுமே செய்யாமல் காலவரையின்றி மசோதாக்களை கிடப்பில் போட முடியாது" என்றார். அப்போது வழக்கறிஞர் சிங்வி, "அதையே நாங்களும் கூறி வருகிறோம். மசோதாக்கள் மீது முடிவெடுக்கும்படி நாங்கள் 2020 ஜனவரி தொடங்கி இப்போது வரை ஆளுநரிடம் கெஞ்சிக் கொண்டிருக்கிறோம். தவறு செய்தோர் மீது நடவடிக்கை எடுக்க ஏதுவாக சில கோப்புகளில் கையெழுத்திட வேண்டி வருகிறோம். சில கைதிகளை நன்னடத்தையின் அடிப்படையில் தண்டனைக் குறைப்புக்கு பரிந்துரைக்க வேண்டி வருகிறோம். ஆனால், அவர் எதையுமே செய்வதில்லை" என்றார்.

அவரைத் தொடர்ந்து வழக்கறிஞர் வில்சனும் வாதிட்டார். அப்போது அவர், "ஆளுநர் செயல்படாமல் இருப்பதால் டிஎன்பிஎஸ்சியில் 14 இடங்களில் தலைவர் உள்பட 10 பதவிகள் காலியாக உள்ளன. எத்தனையோ முறை கோரியும் ஆளுநர் அந்தக் கோப்பை இதுவரை கிடப்பில் போட்டிருக்கிறார்" என்று கவலை தெரிவித்தார். இவ்வாறு நீதிமன்றத்தில் நேற்று வாதிடப்பட்டது. இந்த வழக்கின் அடுத்த விசாரணை நவம்பர் 20-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. சமீபத்தில், பஞ்சாப் ஆளுநருக்கு எதிரான அம்மாநில அரசு தொடர்ந்த வழக்கில், 'மாநில அரசுகள் உச்ச நீதிமன்றத்தை அணுகும் முன்பே மசோதாக்களுக்கு ஆளுநர்கள் ஒப்புதல் தரவேண்டும்' என்று உச்ச நீதிமன்றம் அறிவுரை வழங்கியது. அதேபோல், 'தாங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி அல்ல என்பதை ஆளுநர்கள் மறந்துவிட கூடாது'. என்றும் நீதிபதிகள் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.




புதுக்கோட்டை ரோட்டரி சங்கத்தின் சார்பில் விபத்தில்லா தீபாவளி விழிப்புணர்வு நிகழ்ச்சி புதுக்கோட்டை ராஜகோபாலபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் ரோட்டரி சங்கத் தலைவர் கே.எல். கே.ஏ ராஜராமுகமது தலைமையில் நடைபெற்றது. இதில் பழ தியாகராஜன் மாவட்ட அலுவலர் தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறை விக்டோரியா தலைமை ஆசிரியர் ஆரோக்கியசாமி, மண்டல ஒருங்கிணைப்பாளர் ஜெயக்குமார், துணை ஆளுநர் அருண் பொருளாளர் சுவாமிநாதன் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் ராஜேந்திரன் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



பல்லடம் அனைத்து வணிகர் சங்கம் சார்பாக தீபாவளியை முன்னிட்டு ஏழை எளிய மற்றும் உடல் ஊனமுற்றோர்கள் 25 நபர்களுக்கு புத்தாடையும் இனிப்பும் சங்கத்தின் தலைவர் ராம் கண்ணையன் வழங்கினார். இந்த நிகழ்வில் தமிழ்நாடு வணிகர் பேரமைப்பின் மாவட்ட செயலாளர் லாலா கணேசன்,பல்லடம் செயலாளர். ஆ.அண்ணாதுரை ஆகியோர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தரை. இந்த நிகழ்வு பல்லடம் ராம் வணிக மையத்தில் நடைபெற்றது.

# இராமநாதன் செட்டியார் மேல்நிலைப்பள்ளியில் உலக அறிவியல் தினக் கொண்டாட்டம்

திருமயம், நவ. 11-

உலக அறிவியல் தினத்தை முன்னிட்டு இராமநாதன் செட்டியார் மேல்நிலைப்பள்ளி நச்சாந்துப்பட்டியில் பள்ளியின் தலைமை ஆசிரியர் கணேசன் தலைமையில் மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் சாலை செந்தில், சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம் காலநிலை மாற்றம் காற்று மாசுபாடு உலகளாவிய வெப்ப உயர்வு பற்றி மாணவர்களுக்கு எடுத்துக் கூறி விழிப்புணர்வு உருவாக்கும் வகையில் தேசிய பசுமைப்படை மற்றும் சுற்றுச்சூழல் மாணவர்கள் முன்னிலையில் பள்ளி வளாகத்தில் 50 மரக்கன்றுகள் நட்டு வைத்தார்.



மேலும் மாசற்ற தீபாவளியை கொண்டாடுவதை உறுதிப்படுத்தும் விதமாக கூட்டத்தில் மாணவர்கள் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். தேசிய பசுமைப் படையில் சிறப்பான பங்காற்றிய மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி பாராட்டப்பட்டது. இந்நிகழ்வில் பள்ளியின் பசுமை படை மற்றும் சுற்றுச்சூழல் மன்ற பொறுப்பாசிரியர் முருகேசன், உடற்கல்வி இயக்குனர் ராகேஷ், முதுகலை கணித ஆசிரியர் பாலசுப்பிரமணியன் உடற்கல்வி ஆசிரியர் சண்முக வடிவேல் உள்ளிட்ட ஆசிரியர்கள் மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

# “அனகாபுத்தூரில் 3 தலைமுறை குடியிருப்புவாசிகளை வெளியேற்றுவது மனிதமற்ற செயல்” – தினகரன்

சென்னை, நவ. 11-

“அனகாபுத்தூர், டோபிகானா தெரு உள்ளிட்ட பகுதிகளில் மூன்று தலைமுறைகளாக வசித்து வரும் குடியிருப்புவாசிகளை நீர்நிலை ஆக்கிரமிப்பு எனக் கூறி வலுக்கட்டாயமாக வெளியேற்றுவது கண்டனத்துக்குரியது” என்று அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் கூறியுள்ளார்.



இது குறித்து அவர் நேற்று தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “செங்கல்பட்டு மாவட்டம் அனகாபுத்தூர், டோபிகானா தெரு உள்ளிட்ட பகுதிகளில் மூன்று தலைமுறைகளாக வசித்து வரும் குடியிருப்புவாசிகளை நீர்நிலை ஆக்கிரமிப்பு எனக் கூறி வலுக்கட்டாயமாக வெளியேற்றுவது கண்டனத்துக்குரியது. 50 ஆண்டுகளுக்கு முன்பாகவே சாந்திநகர், தாய்மூகாம்பிகை நகர், டோபிகானா தெரு ஆகிய பகுதிகள் ஊராட்சி, நகராட்சி பட்டியலில் இருப்பதற்கான ஆதாரங்கள் உள்ள நிலையில், நீதிமன்ற உத்தரவு எனக் கூறி அவர்களை வெளியேற்ற முயற்சிப்பது மனிதநேயமற்ற செயலாகும்.

நீதிமன்றத்தில் தகுந்த மேல்முறையீடு செய்து அனகாபுத்தூர், டோபிகானா தெரு உள்ளிட்ட பகுதிகள் நீர்வழித்தடம் மற்றும் நீர் தேங்கும் பகுதி இல்லை என்பதை தெளிவாக விளக்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவானதீர்ப்பைபெறதமிழக அரசு முயற்சிக்க வேண்டும். பல தலைமுறைகளாக வாழ்ந்து வருபவர்களை வெளியேற்றுவதை நிறுத்தி, அங்கு வசிக்கும் அனைத்து குடும்பங்களுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்குவதோடு, வீடுகளை இழந்த ஏழை, எளிய மக்கள் அனைவருக்கும் அரசு சார்பிலே புதிய வீடுகள் கட்டித்தர வேண்டும் என தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறேன்” என்று டிடிவி தினகரன் கூறியுள்ளார்.

# அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஆண்டனி பிளின்கன் இந்தியா வருகை : டெல்லியில் உற்சாக வரவேற்பு

புதுடெல்லி : நவ. 11,

அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஆண்டனி பிளின்கன் இந்தியா வந்தடைந்தார். தனி விமானம் மூலம் டெல்லி வந்த அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. ஏற்கெனவே அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் லாய்ட் ஆஸ்டின் இந்தியா வந்துள்ளார்.



இந்நிலையில் அமெரிக்க வெளியுறவு, பாதுகாப்பு அமைச்சர்கள் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர்,பாதுகாப்புஅமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோரை முறையே சந்தித்து முக்கிய ஆலோசனை நடத்தவுள்ளனர்.

ஆண்டனி பிளின்கனுக்கு வரவேற்பு தெரிவித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்ட வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பக்சி, "அமெரிக்க வெளியுறவு அமைச்சர் பிளின்கனை வரவேற்கிறோம். 2+2 அமைச்சரவை ஆலோசனை 5வது முறையா க இந்தியா - அமெரிக்கா இடையே நடைபெறுகிறது. இந்த சந்திப்பு இந்தியா - அமெரிக்கா இடையேயான உறவை, சர்வதேச அளவிலான ஒத்துழைப்பை மேம்படுத்தும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலை ஊழியர்களுக்கு 10% போனஸ் : தமிழக அரசு உத்தரவு

சென்னை, நவ. 11-

தமிழகத்தில் உள்ள 14 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலை பணியாளர்களுக்கு மிகை ஊதியமாக 8.33% மற்றும் கருணைதொகையாக 1.67% என மொத்தம் 10% போனஸ் வழங்க தமிழகமுதல்வர்முகஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக வேளாண்மை - உழவர் நலத்துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழகத்தில் 16 கூட்டுறவுமற்றும்2பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் உள்ளன. கரும்பு விவசாயிகளின் நலனை பாதுகாக்கவும், சாகுபடி பரப்பை அதிகரிக்கவும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை அதிகரிக்கவும், இவ்வரசு பல்வேறு ஆக்கப்பூர்வமான பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக ஒவ்வொரு பருவத்துக்கும் கரும்பு விவசாயிகளுக்கு மத்திய அரசு நிர்ணயம் செய்யும் கரும்பு விலைக்கு மேல் கூடுதலாக சிறப்பு ஊக்கத்தொகை வழங்கி வருகிறது.

அதனடிப்படையில் கரும்பு விவசாயிகள் நலனில் அக்கறை கொண்ட தமிழக முதல்வர் 2022-23 அரவைப் பருவத்துக்கு கூட்டுறவு, பொதுத்துறை மற்றும் தனியார் துறை சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய தகுதிவாய்ந்த விவசாயிகளுக்குடன் ஒன்றுக்கு ரூ.195 விகிதம் வழங்குவதற்கு ஏதுவாக மொத்தம் ரூ. 253.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார். இவ்வாறு அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக கரும்பு சாகுபடி பரப்பு கணிசமாக அதிகரித்ததுடன் சர்க்கரை ஆலைகளின் செயல்திறனும் உயர்ந்து வருகிறது.

மேலும் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரிந்து வரும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் எதிர்வரும் தீபாவளி பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில் தமிழக முதல்வர் 2022-2023 ஆம் ஆண்டுக்கான மிகை ஊதியம் மற்றும் கருணை தொகை வழங்க ஆணையிட்டுள்ளார். அதன் அடிப்படையில் ஒதுக்கீட்டு உபரி உள்ள சுப்ரமணிய சிவா மற்றும் கள்ளக்குறிச்சி II ஆகிய இரு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கும் மிகை ஊதியமாக 8.33% மற்றும் கருணை தொகையாக 11.67% என மொத்தம் 20% போனஸ் வழங்கவும், மீதமுள்ள 14 கூட்டுறவுமற்றும்2பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு மிகை ஊதியமாக 8.33% மற்றும் கருணை தொகையாக 1.67% என மொத்தம் 10% போனஸ் வழங்கவும் ஆணையிட்டுள்ளார்.

இதன் மூலம் தமிழகத்தில் உள்ள 16 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் சுமார் 6103 தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 2022-2023 ஆம் ஆண்டுக்கான மிகை ஊதியம் மற்றும் கருணை தொகை வழங்க ரூ.415.30 லட்சங்கள் செலவினம் ஏற்படும். இதன் மூலம் அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் எதிர்வரும் காலங்களில் சிறப்பாக பணிபுரிந்து கரும்பு விவசாயிகள் மற்றும் சர்க்கரை ஆலைகளின் வளர்ச்சிக்கு உதவும் சூழ்நிலை உருவாகும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொண்டை வலி... முதல் பக்க தொடர்ச்சி

இருந்தாலும் தொண்டில் தொய்வு இருக்கக்கூடாது என்பதற்காக உங்களையெல்லாம் பார்க்க வந்துவிட்டேன். உங்களை எல்லாம் பார்க்கும் போது உடல் வலி குறைந்து மகிழ்ச்சி அதிகரித்துள்ளது.

தேர்தலின் போது மகளிருக்கு உரிமைத் தொகை வழங்கும் திட்டம் என கூறிய போது இது செயல்படுத்த முடியாத திட்டம் என கூறினார்கள். இவங்க ஆட்சிக்கே வரமாட்டார்கள் என்று கட்டம் எல்லாம் பார்த்தார்கள். ஆனால் நீங்க என்ன சொன்னீங்க, திமுகதான் ஆட்சிக்கு வர வேண்டும் என கூறினீர்கள். கடைசியில் அதுதான் நடந்தது. திமுக சொன்னா நிறைவேற்றும் என ஓட்டுப் போட்டு பதிலடி தந்தீர்கள்.

இந்த முத்துவேல் ஸ்டாலின் சொன்னால் சொன்னதை செய்வேன். நேற்று மாலைக்குள் அந்த தொகை உங்கள் அனைவரின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டும். தகுதியான மகளிருக்கு இந்த ரூபாய் சென்று சேர வேண்டும் என்பதில் அரசு உறுதியாக இருந்தது. இதற்கும் சிலர் விமர்சனம் செய்தார்கள். தொடக்கத்தில் இருந்தே சொன்னோம். பாரபட்சம் இல்லாமல் தகுதியான மகளிர் மட்டுமே விண்ணப்பித்தார்கள், அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது” என்றார்.




மதுரையில் மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் - பொது மருத்துவத் துறையின் முதுநிலை நிபுணர் மற்றும் துறைத் தலைவர் மருத்துவர் கிருஷ்ணமூர்த்தி, மருத்துவ நிர்வாகி டாக்டர்.கண்ணன், நீரிழிவு துறையின் முதுநிலை நிபுணர் டாக்டர். மகேஷ் பாபு ஆகியோர் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 14 ஆம் தேதி கடைபிடிக்கப்படும் உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு இந்த ஆண்டு மருத்துவமனையால் ஏற்பாடு செய்யப்பட்ட செய்தியாளர்கள் சந்திப்பில் அவர்கள் கூறுகையில், “இந்த நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், நீரிழிவு நோய் கண்டறியப்பட்டவர்களுக்கு மருத்துவம் மற்றும் கவனிப்பு கிடைப்பதை உறுதி செய்வதும் சமமான முக்கியத்துவம் உடையது என்றும், இதன்மூலம் அவர்களுக்கு நீரிழிவு நோயுடன் தொடர்புடைய இருதய, சிறுநீரக மற்றும் கண் நோய்கள் போன்ற பிற உடல்நலச் சிக்கல்கள் உருவாவதைத் தவிர்க்கலாம்” என்று கூறினர்.



கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் அருகே உள்ள குமராட்சி ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.12.30 லட்சத்தில் கட்டப்பட்ட புதிய நியாய விலைக் கடை திறப்பு விழா நடைபெற்றது. புதிய நியாய விலைக் கடை கட்டடத்தை திறந்து வைத்தார் ஒன்றியக்குழுத் தலைவர் பூங்குழலி பாண்டியன். பயனாளிகளுக்கு அத்தியாவசியப் பொருள்களை வழங்கினார் விழாவுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் கே.ஆர்.ஜி.தமிழ் வாணன் தலைமை வகித்தார். கூட்டுறவுத் துறை செயல் ஆட்சியர் கே.ரங்கதாஸ் முன்னிலை வகித்தார். செயலர் கே.வெங்கட் ரமணி வரவேற்றார். மற்றும் ஊராட்சி மன்ற வார உறுப்பினர்கள் கூட்டுறவு பணியாளர்கள் கிராம பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்



சட்ட உரிமைகள் கழகம் இன்டர்நேஷனல் அமைப்பின் ஆலோசனைக் கூட்டம் நேற்று செங்கல்பட்டு மாவட்டம் பவுஞ்சூரில் பொதுச்செயலாளர் சுரேஷ்குமார் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த ஆலோசனை கூட்டத்தில் அடுத்த மாதம் டிசம்பர் 10ஆம் தேதி உலக மனித உரிமைகள் தினம் வர இருப்பதால் அதை முன்னிட்டு , அமைப்பு சார்பாக முப்பெரும் விழா அதாவது உலக மனித உரிமைகள் தின விழா மற்றும் சட்ட உரிமைகள் கழகம் இன்டர்நேஷனல் அமைப்பின் பதினோராம் ஆண்டு துவக்க விழா மற்றும் மகளிர் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு நல திட்ட உதவி மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு அமைப்பு சார்பாக கௌரவித்தல் விழாவாக நடத்தலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருந்து 60க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்

# “ஜிஎஸ்டி வரியல்ல : சிறு தொழில்களை ஒழிப்பதற்கான ஆயுதம்” – ராகுல் காந்தி

சாட்னா (மத்தியப் பிரதேசம்), நவ. 11-

ஜிஎஸ்டி என்பது வரியல்ல என்றும், அதுசிறு குறு நடுத்தரத் தொழில்களை ஒழிப்பதற்கான ஆயுதம் என்றும் ராகுல் காந்தி கடுமையாக விமர்சித்துள்ளார்.

மத்தியப் பிரதேச சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, அம்மாநிலத்தின் சாட்னா நகரில் காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி நேற்று தேர்தல் பிரச்சாரம் செய்தார். அப்போது அவர் பேசும்போது, “மிகப் பெரிய தொழில் நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையில் வேலைவாய்ப்புகளை வழங்குவதில்லை. சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள்தான் அதிக எண்ணிக்கையில் வேலைவாய்ப்புகளை வழங்குகின்றன. அவர்கள், சிறிய அளவில் பொருட்களை உற்பத்தி செய்பவர்களாக இருக்கலாம், கடைகளை நடத்துபவர்களாக இருக்கலாம்.



லட்சக்கணக்கான இதுபோன்ற நிறுவனங்களில், மிகப் பெரிய எண்ணிக்கையில் மக்கள் பணியாற்றுகிறார்கள். உண்மையில் நமது இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை அளிப்பவர்கள் அவர்கள் தான். பாஜக ஆட்சியில், இத்தகைய நிறுவனங்கள் தாக்குதலுக்கு உள்ளாகின்றன. அவர்கள் சிறு, குழு, மத்தியத் தர நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்துவதற்காகவே பணமதிப்பிழப்பு நடவடிக்கை, ஜிஎஸ்டி போன்றவற்றைக் கொண்டு வந்தார்கள். ஜிஎஸ்டி என்பது வரியல்ல. அது சிறு, குழு, நடுத்தர நிறுவனங்களை ஒழிப்பதற்கான ஆயுதம்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் மத்தியப் பிரதேசத்தின் முதல்வராக கமல்நாத் இருந்தார். அந்த அரசு, மிகப் பெரிய தொழிலதிபரான அதானிக்கு ஆதரவாக எதையும் செய்யவில்லை. விவசாயிகள், கூலித் தொழிலாளர்கள், சிறிய அளவில் கடைகளை நடத்துபவர்கள் போன்றோருக்கு ஆதரவாகவே செயல்பட்டது. இதன் காரணமாகவே, பெரும் தொழிலதிபர்கள், கோடீஸ்வரர்கள், பிரதமர் மோடி மற்றும் மத்தியப் பிரதேச முதல்வர் சிவராஜ் சிங் சவுஹான் ஆகியோருடன் சேர்ந்து கொண்டு கமல்நாத் அரசை கைப்பற்றினார்கள். உண்மையில் அவர்கள் அந்த அரசை திருடினார்கள்” என்று ராகுல் காந்தி தெரிவித்தார்.

# அதிமுக பெயர், கொடி, சின்னத்தை பயன்படுத்த விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து ஓபிஎஸ் வழக்கு : நவ.15–ல் விசாரணை

சென்னை, நவ. 11-

அதிமுகவின் பெயர், கொடி, சின்னம், லெட்டர்பேடு போன்றவற்றை ஓபிஎஸ் தரப்பு பயன்படுத்த விதிக்கப்பட்டுள்ள இடைக்கால தடையை எதிர்த்து தொடரப்பட்டுள்ள வழக்கை வரும் புதன்கிழமை (நவ.15) விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக சென்னை உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

கடந்த 2022 ஜூலை 11-ம் தேதி நடந்த அதிமுக பொதுக்குழுவில் ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட 4 பேரைகட்சியில்இருந்துநீக்கியும், பழனிசாமியை இடைக்கால பொதுச் செயலாளராக தேர்வு செய்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதை எதிர்த்து ஓபிஎஸ் தொடர்ந்த வழக்கில், அவர் உட்பட 4 பேரை நீக்கி பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு தடை விதிக்க உயர் நீதிமன்றம் மறுப்பு தெரிவித்தது.

இந்த நிலையில், அதிமுகவின் பெயர், கொடி, சின்னம், லெட்டர்பேடு போன்றவற்றை ஓபிஎஸ் தரப்பினர் பயன்படுத்த தடை விதிக்க கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி மனு தாக்கல் செய்தார்.



இந்த வழக்கை விசாரித்த நீதிபதி என்.சதீஷ்குமார் நவ.7ம் தேதி பிறப்பித்த உத்தரவில், பொதுக்குழு தீர்மானங்கள் மற்றும் பொதுச் செயலாளர் தேர்தலை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தள்ளுபடி செய்து உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு உச்ச நீதிமன்றம் இடைக்கால தடை எதுவும் விதிக்கவில்லை. எனவே, அதிமுக பெயர், கொடி, சின்னம், லெட்டர்பேடு போன்றவற்றை, கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ள ஓபிஎஸ் மற்றும் அவரது தரப்பினர் பயன்படுத்த கூடாது என்று இடைக்கால தடை விதித்து, வழக்கை நவ.30-க்கு தள்ளிவைத்து உத்தரவிட்டார்.

இந்நிலையில், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஆர். மகாதேவன் மற்றும் முகமது ஷபீக் ஆகியோர் அடங்கிய அமர்வில் ஓபிஎஸ் தரப்பில் கடந்த 8-ம் தேதி, தனிநீதிபதி பிறப்பித்த உத்தரவை எதிர்த்து முறையீடு செய்யப்பட்டது. இந்த முறையீட்டைக் கேட்ட நீதிபதிகள், மனுதாக்கல் நடைமுறைகள் முடிந்துவிட்டால், வழக்கை நேற்று விசாரணைக்கு எடுப்பதாக தெரிவித்திருந்தனர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு பட்டியலிடப்படவில்லை. இதைத்தொடர்ந்து, ஓபிஎஸ் தரப்பில் மூத்த வழக்கறிஞர் அரவிந்த் பாண்டியன் ஆஜராகி, மனுதாக்கல் நடைமுறைகள் முடிந்த பிறகும் கூட, வழக்கு விசாரணைக்கு பட்டியலிடப்படவில்லை. எனவே, இன்றைக்கே இந்த வழக்கை விசாரணைக்கு எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார். இதையடுத்து வழக்கை புதன்கிழமைக்கு விசாரணைக்கு எடுப்பதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.

மேலும், இந்த வழக்கில் தனிநீதிபதிபிறப்பித்தஉத்தரவின் சான்றளிக்கப்பட்ட நகல் இல்லாமல், இந்த மனுவுக்கு எண்ணிட பதிவுத்துறைக்கு உத்தரவிட்டனர். இதனால், இந்த வழக்கு வரும் புதன்கிழமை விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# “முதலில் பதவி நீக்கம், பின்னர்...” – மக்களவை நெறிமுறைக் குழு அறிக்கையை சாடிய மஹுவா மொய்த்ரா

புதுடெல்லி : நவ. 11,

மக்களவை நெறிமுறைக் குழுவால் நெறிமுறையற்ற முறையில் வெளியேற்றப்பட்ட முதல் நபர் என்ற முறையில் பெருமையடைவதாக எம். பி. மஹுவா மொய்த்ரா தெரிவித்துள்ளார்.

திரிணமூல் காங்கிரஸ் எம். பி. மக்களவை எம்.பி. மஹுவா மொய்த்ராவை பதவி நீக்கம் செய்ய மக்களவை நெறிமுறை குழு நேற்று முன்தினம் வியாழக்கிழமை பரிந்துரைத்த நிலையில், நேற்று தனது சமூக வலைதளப் பக்கத்தில் அது குறித்து பதிவிட்டுள்ளார். அதில் அவர், "நாடாளுமன்ற வரலாற்றில் முதல்முறையாக நெறிமுறைகளற்ற முறையில், மக்களவை நெறிமுறைக் குழுவால் வெளியேற்றப்படும் முதல் நபர் நான் என்பதில் பெருமிதம் கொள்கிறேன். முதலில் அவர்கள் வெளியேற்றுவார்கள். பின்னர் ஆதாரங்களைக் கண்டுபிடிக்குமாறு சிபிஐயிடம் கூறும்படி அரசிடம் கேட்பார்கள். ஆரம்பம் முதல் முடிவு வரை கங்காரு நீதிமன்றம். குரங்கு வியாபாரம்" என்று தெரிவித்துள்ளார்.



மேலும் மற்றொரு பதிவில், "ஒரு நல்ல பிரச்சினையை வீணாக்காதீர்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள். இது எனது 2024 மக்களவைத் தேர்தல் வெற்றியை இரட்டிப்பாக்கும்" என்று தெரிவித்துள்ளார். பின்னர் இந்தப் பதிவை மொய்த்ரா நீக்கியதாக தெரிகிறது. முன்னதாக, பிரதமர் நரேந்திர மோடி, தொழிலதிபர் கவுதம் அதானிக்கு எதிராக மக்களவையில் கேள்வி எழுப்ப திரிணமூல் காங்கிரஸ் எம்.பி. மஹுவா மொய்த்ரா லஞ்சம் பெற்றதாக புகார் எழுந்தது. குறிப்பாக தொழிலதிபர் தர்ஷன் ஹிராநந்தானியிடம் இருந்து பல்வேறு பரிசுப் பொருட்களை மஹுவா பெற்றதாக கூறப்படுகிறது. இதுகுறித்து பாஜக எம்.பி. நிஷிகாந்த் துபே அளித்த புகாரின் பேரில், விசாரணை நடத்த மக்களவை நெறிமுறை குழுவுக்கு மக்களவை தலைவர் ஓம் பிர்லா உத்தரவிட்டார். நெறிமுறை குழு முன்பு மஹுவா மொய்த்ரா கடந்த 2-ம் தேதி ஆஜராகி விளக்கம் அளித்தார்.

இந்நிலையில், நெறிமுறை குழு உறுப்பினர்களுக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை 500 பக்க அறிக்கை வழங்கப்பட்டது. அதில், “நாடாளுமன்ற இணையதளத்தில், தனது சார்பில் கேள்விகளை கேட்க ஒரு வெளிநாட்டு தொழிலதிபரை (நண்பர்) அனுமதித்ததாக மொய்த்ரா ஒப்புக்கொண்டுள்ளார். இது நாடாளுமன்ற நெறிமுறைகளை மீறுவது மட்டுமின்றி, தேசிய பாதுகாப்பையும் கேள்விக் குறியாக்கி உள்ளது” என்று கூறப்பட்டுள்ளது. இதனிடையே நெறிமுறை குழுவின் ஆலோசனை கூட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடந்தது. இதில், மஹுவா மொய்த்ராவை மக்களவையில் இருந்து பதவி நீக்கம் செய்யுமாறு மக்களவை தலைவருக்கு பரிந்துரை செய்ய முடிவு செய்யப்பட்டது. இது தொடர்பான வரைவு அறிக்கை மீது நடந்த வாக்கெடுப்புக்கு 6 உறுப்பினர்கள் ஆதரவளித்த நிலையில் 4 பேர் எதிர்ப்பு தெரிவித்தனர். பெரும்பான்மை அடிப்படையில், இந்த அறிக்கை ஏற்கப்பட்டது. மக்களவை தலைவர் ஓம் பிர்லாவிடம் இந்த அறிக்கை நேற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வரலாறு விளையாட்டு

# “வெளியில் நடந்த சதியே காரணம்” இலங்கை தோல்வி குறித்து தேர்வுக் குழு தலைவர்





**கொழும்பு : நவ. 11,**

**உலகக் கோப்பையில் இலங்கையின் மோசமான தோல்விக்கு வெளியில் நடந்த சதியே காரணம் என அந்த அணியின் தேர்வுக் குழுத் தலைவர் பிரமோதய விக்ரமசிங்கே தெரிவித்துள்ளார்.**

நடப்பு உலகக் கோப்பை தொடரில் இலங்கை அணி மோசமான தோல்வியை தழுவி வெளியேறியது. விளையாடிய 9 போட்டிகளில் 2 போட்டிகளில் மட்டுமே வெற்றிபெற்றது. இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் 55 ரன்களுக்கு சுருண்ட இலங்கை, 302 ரன்கள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது. இந்த தோல்விக்கு பின்பு கடுமையான விமர்சனங்களை தாண்டி, இலங்கை கிரிக்கெட் வாரியத்தில் பிரச்சினைகள் வெடித்துள்ளன.

பெங்களூருவில் நடந்த நியூஸிலாந்துக்கு எதிரான கடைசி ஆட்டத்தில் 5 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியடைந்த நிலையில் நாடு திரும்பியுள்ளது இலங்கை அணி. அப்போது விமான நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த இலங்கை அணியின் தேர்வுக் குழுத் தலைவரும், 1996 உலகக் கோப்பையை வென்ற இலங்கை அணி வீரர்களில் ஒருவருமான பிரமோதய விக்ரமசிங்கே பேசுகையில், “இலங்கையின் தோல்வி மிகவும் வருத்தமாக உள்ளது. இதற்கு நானே முழுப் பொறுப்பேற்கிறேன். இலங்கையின் மோசமான தோல்விக்கு வெளியில் நடந்த சதியே காரணம். எனக்கு இரண்டு நாட்கள் அவகாசம் கொடுங்கள். இது பற்றி அனைத்தையும் சொல்கிறேன்” என்று கூறினார்.

இது இலங்கை கிரிக்கெட் வட்டாரத்தில் புதிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஏனென்றால் இந்தியாவுடனான தோல்விக்கு பிறகு ஊழல் குற்றச்சாட்டு காரணமாக இலங்கை கிரிக்கெட் வாரியத்தை கலைத்துள்ளதாக அந்நாட்டு விளையாட்டுத் துறை அமைச்சர் ரோஷன் ரணசிங்கா அறிவித்தார். மேலும், நிர்வாக பணிகளை கவனிப்பதற்காக, 1996-ல் இலங்கைக்கு உலகக் கோப்பையை வென்றுகொடுத்த முன்னாள் கேப்டன் அர்ஜுன ரணதுங்கா தலைமையில் ஏழுபேர் கொண்ட இடைக்கால குழு ஒன்று நியமித்தார். ஆனால் இதில் நீதிமன்றம் தலையிட்டு இந்த உத்தரவுக்கு தடை விதித்தது. இதன்பின் நேற்று இலங்கையின் பாராளுமன்றத்தில் கிரிக்கெட் வாரியத்துக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# “இங்கிலாந்தை டிரெஸ்ஸிங் ரூமில் பூட்டி டைம்டு அவுட்டாக்கலாம்” பாக். அரையிறுதி தகுதிக்கு வாசிம் அக்ரம் ‘கலாய்’ ஐடியா





**பெங்களூரு : நவ. 11,**

**உலகக் கோப்பையில் பாகிஸ்தான் அணி அரையிறுதிக்கு செல்வது குறித்து அந்நாட்டு முன்னாள் வீரர் வாசிம் அக்ரம் கிண்டலாக கொடுத்துள்ள ஐடியா பேசுபொருளாகியுள்ளது.**

நடப்பு உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின் அரையிறுதி சுற்றுக்கு இந்தியா, தென் ஆப்பிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய அணிகள் முன்னேறியுள்ளன. அடுத்த சுற்றுக்கு நான்காவது அணியாக முன்னேற உள்ள அணி எது என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. பெங்களூருவில் இலங்கையை 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் நியூஸிலாந்து வீழ்த்தியது. இதன் மூலம் அந்த அணிக்கு நாக்-அவுட் சுற்றில் நான்காவது அணியாக முன்னேறும் வாய்ப்பு பிரகாசமடைந்துள்ளது.

அதே நேரத்தில் நான்காவது அணியாக பாகிஸ்தானும் முன்னேறும் வாய்ப்பு உள்ளது. ஆனால், இன்று கொல்கத்தாவில் நடைபெறும் போட்டியில் இங்கிலாந்து அணியை பெரிய வித்தியாசத்தில் வீழ்த்தி, அசாத்திய வெற்றியை பெற வேண்டும். பாகிஸ்தான் 287 ரன்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வெல்ல வேண்டும். அல்லது இங்கிலாந்தை 150 ரன்களுக்குள் சுருட்டி, அந்த இலக்கை 3.4 ஓவர்களில் எட்ட வேண்டும். அதன் மூலம் நியூஸிலாந்தை ரன் ரேட் அடிப்படையில் முந்தலாம். அப்படி இல்லாமல் இந்தப் போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்றாலும் நெட் ரன் ரேட் அடிப்படையில் நியூஸிலாந்து அரை இறுதியில் விளையாடும்.

இதனிடையே, தனியார் டிவியில், பாகிஸ்தான் அரையிறுதிக்குதகுதிபெறுவது குறித்த நிகழ்ச்சியொன்று நடத்தப்பட்டது. இதில், பாகிஸ்தான் அணியின் ஜாம்பவான்கள் வாசிம் அக்ரம், மொயீன் கான், மிஸ்பா உல் ஹக் மற்றும் சோயப் மாலிக் ஆகியோர் கலந்துகொண்டனர். இதில் பேசிய நிகழ்ச்சி தொகுப்பாளர், பாகிஸ்தான் அரையிறுதிக்கு தகுதிபெற வாசிம் அக்ரம் கிண்டலாக சொன்ன ஐடியாவை வெளிப்படுத்தினார். அதன்படி, “பாகிஸ்தான் அணி முதலில் பேட் செய்து அதிக ரன்கள் குவிக்க வேண்டும். பின்னர் இங்கிலாந்து அணியை டிரெஸ்ஸிங் அறையில் 20 நிமிடங்கள் பூட்டி வைத்து அனைவரையும் ‘டைம்டு அவுட்’ செய்துவிட்டால் பாகிஸ்தான் எளிமையாக வெற்றிபெறும்” என்று வாசிம் அக்ரம் கூறியதாக நிகழ்ச்சி தொகுப்பாளர் வெளிப்படுத்தினார். இந்த கிண்டல் ஐடியாவால் நிகழ்ச்சியில் முன்னாள் வீரர்கள் மத்தியில் சிரிப்பலை எழுந்தது.

அப்போது இடைமறித்த மற்றொரு முன்னாள் வீரர் மிஸ்பா உல் ஹக் இன்னும் சிறந்தொரு ஐடியா இருக்கிறது என்று கூறி, “பாகிஸ்தான் அணி முதலில் பேட்டிங் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஆட்டம் தொடங்குவதற்கு முன்பே இங்கிலாந்து அணியை அறையில் வைத்து பூட்டிவிட்டால் பாகிஸ்தான் கடினமாக உழைக்க வேண்டி இருக்காது” என கிண்டலாக தெரிவித்துள்ளார்.

# “தாத்தா, பாட்டிகள் நமது தேவதைகள்” நியூஸி. வீரர் ரச்சின் வீடியோ வைரல்





**பெங்களூரு : நவ. 11,**

**நியூஸிலாந்து கிரிக்கெட் வீரர் ரச்சின் ரவீந்திரா பெங்களூருவில் உள்ள தனது பாட்டி வீட்டுக்குச் சென்றபோது நடத்தப்பட்ட சடங்குகள் குறித்து வீடியோ வைரலாகி வருகிறது.**

ரச்சின் ரவீந்திராவுக்கு இந்தியாதான் பூர்விகம். அவரின் தாய் - தந்தை நியூஸிலாந்துக்கு இடம்பெயர்ந்ததை தொடர்ந்து அங்கு வசித்து வருகிறார். இந்திய கிரிக்கெட் ஜாம்பவான்கள் சச்சின் மற்றும் திராவிட் ஆகியோரின் பெயரை சூட்டும் வகையில் இவருக்கு ரச்சின் ரவீந்திரா எனப் பெயர் வைத்துள்ளார் அவரின் தந்தை. சச்சின் மற்றும் திராவிட் போல் வரவேண்டும் என இப்பெயர் சூட்டியதுடன் கிரிக்கெட் பயிற்சியும் மகனுக்கு அளித்தார். அதற்கேற்ப கிரிக்கெட் விளையாட்டில் நடப்பு உலகக் கோப்பை தொடரில் நியூஸிலாந்து அணிக்காக பங்கேற்று சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார் ரச்சின்.

நடப்பு உலகக் கோப்பை தொடரில் நியூஸிலாந்து அணிக்காக முதல்முறையாக பங்கேற்றுள்ள 23 வயதான ரச்சின் ரவீந்திரா பல்வேறு சாதனைகளை படைத்து வருகிறார். இதுவரை 9 போட்டிகளில் விளையாடி, 565 ரன்களை குவித்து அதிக ரன்கள் குவித்த வீரர்களின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார். இதில் அவரின் 3 சதங்களும், 2 அரைசதங்களும் அடக்கம். இதன்மூலம் 50 ஓவர் உலகக் கோப்பை தொடரில் 25 வயதுக்கு முன்பு அதிக ரன்கள் எடுத்த வீரர் என்ற சச்சின் டெண்டுல்கரின் 27 ஆண்டுகால சாதனையை ரச்சின் முறியடித்துள்ளார். 1996 உலகக் கோப்பையில் சச்சின் எடுத்து 523 ரன்களே இதுவரை சாதனையாக இருந்தது. தொடர்ந்து சிறப்பாக விளையாடி வரும் ரச்சின், 2023 அக்டோபர் மாதத்தின் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான ஐசிசி விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இலங்கை ஆட்டத்துக்கு பிறகு பெங்களூருவில் உள்ள தனது தாத்தா - பாட்டி வீட்டுக்கு விசிட் அடித்துள்ளார் ரச்சின். அப்போது, தனது பாட்டி சுத்திப் போட்டு திருஷ்டி கழிக்கும் காட்சிகளை வீடியோவாக தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள ரச்சின், “இதுபோன்ற அற்புதமான குடும்பத்தைப் பெற்றது எனது பாக்கியம். தாத்தா, பாட்டிகள் நமது தேவதைகள். அவர்களின் நினைவுகளும் ஆசிர்வாதங்களும் என்றென்றும் நம்முடன் இருக்கும்” என்று நெகிழ்ச்சியுடன் பதிவிட்டுள்ளார். ரச்சினின் இந்தப் பதிவு தற்போது வைரலாகிவருகிறது.

முன்னதாக, இலங்கை எதிரான போட்டியில் இரண்டு விக்கெட் வீழ்த்திய ரச்சின், பேட்டிங்கிலும் ஜொலித்து 34 பந்துகளில் 42 ரன்கள் எடுத்து வெற்றிக்கு உதவினார். பெங்களூருவில் இந்த ஆட்டம் குறித்து பேசிய அவர், “பெங்களூருவில் எனக்கு நிறைய ஆதரவு கிடைத்ததில் மகிழ்ச்சி. மைதானத்தில் ரசிகர்கள் எனது பெயரை உச்சரித்து உற்சாகத்தை ஏற்படுத்தினர். இது சிறுவயது முதல் நான் கண்ட கனவு. எனது டீன் ஏஜ் வயதில் பெங்களூருவுக்கு வந்துள்ளேன்” என பெங்களூரு நினைவுகளை பகிர்ந்துகொண்டார்.

# சென்னையில் நவ.18-ல் சர்வதேச செஸ் போட்டி



**சென்னை : நவ. 11,**

**சீயோன் மற்றும் ஆல்வின் குழுமப் பள்ளிகள் சார்பில் சர்வதேச ஓபன் ஃபிடே ரேட்டிங் ஓபன் செஸ் தொடர் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.**

ரூ.3 லட்சம் பரிசுத் தொகை கொண்ட இந்த போட்டி சென்னை மப்பேடில் உள்ள சீயோன் சர்வதேச பள்ளியில் வரும் 18-ம் தேதி முதல் 21-ம் தேதி வரை நடைபெறுகிறது.

அகில இந்திய செஸ் சம்மேளனத்தின் அங்கீகாரம் பெற்ற இந்த போட்டியை மவுண்ட் செஸ் அகாடமி மற்றும் தமிழ்நாடு மாநில செஸ் சங்கம் இணைந்து நடத்துகிறது. முதல் 30 இடங்களை பிடிக்கும் வீரர்களுக்கு தலா ரூ.30 ஆயிரம் பரிசுத் தொகையும், கோப்பையும் பரிசாக வழங்கப்படும். இதுதவிர 60 பேருக்கு ரொக்கப் பரிசும், 6 பேருக்கு ஆறுதல் பரிசும் பல்வேறு பிரிவுகளில் வழங்கப்பட உள்ளது.

இந்தத் தொடரில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து 200 வீரர்கள் பங்கேற்பதை உறுதி செய்துள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர். போட்டியில் கலந்து கொள்வதற்கு நுழைவு கட்டணம் ரூ.1,500 ஆகும். போட்டியில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் வரும் 14-ம் தேதிக்குள் தங்களது பெயரை இணையதளம் வழியாக பதிவு செய்துகொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியர்கள் எங்கள் மீது பிரியத்தை கொட்டுகின்றனர் உருகிய ஆப்கானிஸ்தான் கேப்டன்



**விளையாட்டு செய்தி : நவ. 11,**

**நடப்பு உலகக்கோப்பையில் ஆப்கானிஸ்தான் அணி மிகப்பெரிய சாம்பியன்களையெல்லாம் ஊதித்தள்ளி இந்திய ரசிகர்களால் கொண்டாடப்படுகிறது. இதனை ஆப்கன் கேப்டனே நெகிழ்ச்சியோடு கூறியுள்ளார்.**

நடப்பு உலகக்கோப்பையில் ஆஃப்கானிஸ்தான் அணி இதுவரை 4 போட்டிகளில் வென்றிருக்கிறது. ஆப்கானிஸ்தான் அணியின் உத்வேகமிக்க ஆட்டத்தை கண்டு ஆச்சர்யமடைந்து பல தரப்பினரும் அந்த அணிக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் இந்திய ரசிகர்களின் அன்பு குறித்து ஆஃப்கானிஸ்தான் கேப்டன் ஹஸ்மத்துல்லா ஷாகிதி நெகிழ்ச்சியாகப் பேசியிருக்கிறார்.

வான்கடே மைதானத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த ஹஸ்மத்துல்லா ஷாகிதி, ‘உலகக்கோப்பையில் நாங்கள் ஆடும் விதத்தைப் பார்த்து எங்கள் நாட்டு மக்கள் பெருமிதமாக உணர்கின்றனர். எங்களின் வெற்றிகளும் சாதனைகளும் அவர்களை ரொம்பவே மகிழ்ச்சியாக இருக்கின்றனர். இந்திய ரசிகர்களை பற்றியும் குறிப்பிட்டே ஆக வேண்டும். அவர்களும் எங்களுக்கு பலத்த வரவேற்பை அளித்திருக்கின்றனர். நாங்கள் ஆடும் ஒவ்வொரு போட்டிக்கும் திரளாக திரண்டு வந்து மைதானத்தை நிரப்பி உற்சாகமளிக்கின்றனர். இதெல்லாம் எங்களுக்கு பெரும் ஊக்கத்தை கொடுத்திருக்கிறது. களத்தில் மட்டுமல்ல களத்திற்கு வெளியேயும் ரசிகர்கள் எங்களை நெகிழ வைத்தனர்

எங்காவது வெளியே எங்களை ஆப்கன் வீரர்கள் என கண்டுகொண்டால் எல்லையற்ற அன்பைப் பொழியத் தொடங்கிவிடுகின்றனர். நான் ஒரு டாக்ஸியை பிடித்து சில இடங்களுக்கு சென்றேன். என்னை அடையாளம் கண்டு கொண்டவுடன் அந்த டாக்ஸி ட்ரைவர் என்னிடம் காசே வாங்கவில்லை. இப்படித்தான் இந்தியர்கள் எங்கள் மீது பிரியத்தை கொட்டுகின்றனர். இது எங்களுக்கு பெரும் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. நாங்கள் இந்திய ரசிகர்களுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறோம்.’ என்றார்.

ஹஸ்மத்துல்லா ஷாகிதி சொல்வதைப் போன்று அவர்கள் ஆடும் அத்தனை போட்டிகளுக்கும் இந்திய ரசிகர்கள் பெருவாரியாக வந்து ஆதரவு தெரிவித்திருந்தனர். சேப்பாக்கம் மைதானத்தில் ஆப்கானிஸ்தான் அணி பாகிஸ்தானை வீழ்த்திய போட்டிக்கு கிட்டத்தட்ட 25000 ரசிகர்கள் வருகை தந்திருந்தனர்.

வரலாறு சினிமா

# ஐஸ்வர்யா ரஜினிகாந்தின் ‘லால் சலாம்’ டீசர் நவ.12-ல் ரிலீஸ்



**சென்னை : நவ. 11,**

**ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்கியுள்ள ‘லால் சலாம்’ திரைப்படத்தின் டீசர் வரும் நவம்பர் 12-ம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.**

தனுஷ் நடித்த ‘3’, கவுதம் கார்த்திக் நடித்த ‘வை ராஜா வை’ படங்களுக்குப் பிறகு, ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்கியுள்ள படம், ‘லால் சலாம்’. இந்தப் படத்தில் ‘மொய்தீன் பாய்’ என்ற கதாபாத்திரத்தில் நடிகர் ரஜினிகாந்த் கவுரவ வேடத்தில் நடித்துள்ளார். விக்ராந்த், விஷ்ணு விஷால் இருவரும் பிரதான கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். படத்துக்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்துள்ளார். லைகா சார்பில் சுபாஷ்கரன் படத்தை தயாரித்துள்ளார். ரெட் ஜெயன்ட் நிறுவனம் தமிழகத்தில் படத்தை வெளியிடுகிறது.

இதன் படப்பிடிப்பு மும்பை, சென்னை, புதுச்சேரி, திருவண்ணாமலை உள்ளிட்ட பகுதிகளில் நடந்து வந்த நிலையில், அண்மையில் முடிந்ததாக படக்குழு அறிவித்தது. இந்நிலையில், படத்தின் டீசர் வரும் நவம்பர் 12-ம் தேதி காலை 10.45 மணிக்கு வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான போஸ்டர் இஸ்லாமியர் ஒருவர் அமர்ந்திருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. படம் அடுத்த ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு திரையரங்குகளில் வெளியாவது குறிப்பிடத்தக்கது.

# அருமையான படைப்பு ‘ஜிகர்தண்டா டபுள் எக்ஸ்’ படத்தை பார்த்த தனுஷ் கருத்து



**சென்னை: நவ. 11,**

**கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் 2014-ம் ஆண்டு வெளியான படம், ‘ஜிகர்தண்டா’. இந்தப் படத்தின் இரண்டாம் பாகமான ‘ஜிகர்தாண்டா டபுள் எக்ஸ்’ திரைப்படம் வெள்ளிக்கிழமை (நவ.10) திரை அரங்குகளில் வெளியாகி உள்ளது. இந்த சூழலில் படத்தை பார்த்த பின்னர் நடிகர் தனுஷ், படக்குழுவினரை பாராட்டியுள்ளார்.**

ராகவா லாரன்ஸ் மற்றும் எஸ்.ஜே.சூர்யா இணைந்து நடித்துள்ளனர். நிமிஷா சஜயன், இளவரசு, சத்யன் ஆகியோரும் நடித்துள்ளனர். சந்தோஷ் நாராயணன் இசையமைத்துள்ள இப்படத்துக்கு திருநாவுக்கரசு ஒளிப்பதிவு செய்துள்ளார்.

“ஜிகர்தண்டா டபுள் எக்ஸ் படத்தைப் பார்த்தேன். இயக்குநர் கார்த்திக் சுப்புராஜின் அருமையான படைப்பு. வழக்கம் போலவே அசத்தியுள்ளார் எஸ்.ஜே.சூர்யா. லாரன்ஸ் அபார நடிப்பை வெளிப்படுத்தி உள்ளார். சந்தோஷ் நாராயணனின் இசை அற்புதம். இந்தப் படத்தின் கடைசி 40 நிமிடங்கள் உங்கள் இதயங்களை கவரும். படக்குழுவினருக்கு வாழ்த்துகள்” என தனுஷ் ட்வீட் செய்துள்ளார்.

# இந்திய கம்யூ. மாநிலச் செயலாளர் முத்தரசனின் ‘அரிசி’ படத்தின் முதல் தோற்றம் வெளியீடு



**சென்னை : நவ. 11,**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் நடிகராக அறிமுகமாகும் ‘அரிசி’ படத்தின் முதல் பார்வையை பாரதிராஜா தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.**

இளையராஜா இசையில் உருவாகும் இந்தப் படத்தை மோனிகா புரொடக்‌ஷன் சார்பில் பி.சண்முகம் தயாரிக்கிறார். எஸ்.ஏ.விஜய்குமார் இயகுக்கிறார். இரா. முத்தரசன் மனைவியாக ரஷ்யா மாயன் நடிக்கிறார். சிசர் மனோகர், கோவி இளங்கோ, ராஜா திருநாவுக்கரசு, அர்ஜுன்ராஜ், மகிமை ராஜ், வையகன், அன்பு ராணி உட்பட பலர் நடிக்கின்றனர். ஜான்சன் ஒளிப்பதிவு செய்கிறார். விவசாயத்தை பின்னணியாக கொண்டு உருவாகும் இப்படம் உணவின் முக்கியத்தை வலியுறுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

படம் குறித்து இயக்குநர் விஜய்குமார் கூறுகையில், “முத்தரசனிடம் இதில் நடிக்கக் கேட்டபோது முதலில் அவர் மறுத்துவிட்டார். தனக்கு அரசியல் பணிகள் அதிகம் இருக்கின்றன என்று கூறிவிட்டார். இருந்தாலும் இந்தக் கதையில் நடித்து இதன் கருத்தை நீங்கள் சொன்னால்தான் சரியாக இருக்கும் என்று சொன்னோம். பிறகு கதையைக் கேட்டார். விவசாயப் பின்னணி கதை. முதலில் தயக்கத்துடன் படப்பிடிப்புக்கு வந்தார். பிறகு சகஜமாகிவிட்டார்” என்றார்.

இந்நிலையில், இப்படத்தின் முதல் பார்வையை இயக்குநர் பாரதிராஜா தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ளார். போஸ்டரை பொறுத்தவரை கருமேகம் மற்றும் வயல் வெளியில் சட்டையில்லாமல் பனியனும் தோளில் துண்டும் போட்டுக்கொண்டு முத்தரசன் நின்றுகொண்டிருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. படத்தின் இறுதிக்கட்ட பணிகள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ‘கொரோனா குமார்’ பட விவகாரம் சிம்புவுக்கு தடை விதிக்க ஐகோர்ட் மறுப்பு



**சென்னை : நவ. 11,**

**‘கொரோனா குமார்’ படத்தில் நடித்து முடிக்காமல் மற்ற படங்களில் நடிப்பதற்கு சிம்புவுக்கு தடை விதிக்க வேண்டும் என்ற வேல்ஸ் நிறுவனத்தின் கோரிக்கையை சென்னை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.**

வேல்ஸ் ஃபிலிம்ஸ் இண்டர்நேஷனல் நிறுவனம் சார்பில் ‘கொரோனா குமார்’ என்ற பெயரில் படம் தயாரிக்க முடிவுசெய்து, நடிகர் சிம்புவுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்தப் படத்தில் நடிப்பதற்காக சிம்புவுக்கு 9.5 கோடி ரூபாய் சம்பளமாக பேசப்பட்டு, 4.5 கோடி ரூபாய் முன்பணமாக கடந்த 2021ம் ஆண்டு அளிக்கப்பட்டதாகவும், பணத்தை பெற்றுக்கொண்டு படப்பிடிப்புக்கு வராததால், கொரோனா குமார் படத்தை முடித்து கொடுக்காமல் மற்ற படங்களில் நடிக்க சிம்புவுக்கு தடை விதிக்க வேண்டுமென கோரி வேல்ஸ் ஃபிலிம்ஸ் இண்டர்நேஷனல் நிறுவனம் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

வழக்கு விசாரணையின் போது, இந்த விவகாரம் தொடர்பாக நடிகர் சிலம்பரசன் மற்றும் வேல்ஸ் நிறுவனம் இடையே போடப்பட்ட ஒப்பந்தம் சமர்பிக்கப்பட்டது. அதில் ஒரு கோடி ரூபாய் மட்டுமே சிலம்பரசனுக்கு வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இதையடுத்து, ஒப்பந்தத்தில் உள்ள படி, ஒரு கோடி ரூபாய்க்கான உத்தரவாதத்தை செலுத்த சிலம்பரசனுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், இந்த வழக்கு நீதிபதி சி.சரவணன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போத நடிகர் சிம்பு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், நீதிமன்ற உத்தரவுப்படி, ஒரு கோடி ரூபாய் டெபாசிட் செய்ததற்கான ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். இதனையடுத்து, அந்த டெபாசிட் செய்யப்பட்ட தொகை இரண்டு மாதங்களுக்கு மட்டுமே செல்லும் என தெரிவித்த நீதிபதி இந்த விவகாரத்தில் மத்தியஸ்தராக மூத்த வழக்கறிஞர் என்.எல்.ராஜாவை நியமித்து உத்தரவிட்டார்.

மேலும், கொரோனா குமார் படத்தில் நடிக்காமல் மற்ற படங்களில் நடிக்க சிம்புவுக்கு தடை விதிக்க வேண்டுமென்ற வேல்ஸ் நிறுவன கோரிக்கையை ஏற்க மறுத்த நீதிபதி வெளிநாடு செல்வதற்கோ அல்லது வேறு படங்களிலோ நடிப்பதற்கு தடை விதித்தால் மற்ற நிறுவனங்களுடன் தொழில் ரீதியாக அவர் மேற்கொண்ட பணிகளை பாதிக்கும் எனவும் நீதிபதி தெரிவித்துள்ளார்



வரலாறு உலகம்

# காசாவில் தினமும் 4 மணி நேரம் போர் நிறுத்தம் அமெரிக்கா சொன்ன தகவலும், இஸ்ரேல் பிரதமரின் விளக்கமும்



**டெல் அவிவ் : நவ. 11,**

**காசாவில் தினமும் 4 மணி நேரம் போரை நிறுத்த இஸ்ரேல் ஒப்புதல் அளித்துள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ள நிலையில், இது குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது விளக்கத்தை அளித்துள்ளார். முன்னதாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிபர் ஜோ பைடன் நிர்வாகம் தரப்பில், மனிதாபிமான அடிப்படையில் வடக்கு காசாவில் அன்றாடம் 4 மணி நேரம் போர் நிறுத்தம் மேற்கொள்ள இஸ்ரேல் ஒப்புதல் அளித்துள்ளது என்று தெரிவித்தது.**

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அதிபர் பைடனுன், குறைந்தது மூன்று நாட்களுக்கு மேலாவது போர் நிறுத்தம் மேற்கொள்ளும்படி இஸ்ரேலிடம் வேண்டியுள்ளதாகக் கூறினார். அதேவேளையில் "இஸ்ரேல் நிச்சயமாக முழுமையான போர் நிறுத்தத்தை இபோதைக்கு மேற்கொள்ள வாய்ப்பில்லை" என்றும் கூறினார்.

இந்நிலையில், இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கூறுகையில், "போர் நிறுத்தம் என்பது ஆங்காங்கே மேற்கொள்ளப்படும். ஆனால் இது மீண்டும் மீண்டும் நடக்குமா எனத் தெரியவில்லை. ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக நாங்கள் போர் மேற்கொண்டுள்ளோம். ஆகையால் வடக்கு காசாவில் உள்ள பொது மக்கள் பத்திரமாக வெளியேறும் வகையில் சில மணி நேரங்கள் தாக்குதல்கள் நிறுத்தப்படும். அதுவும் குறிப்பிட்ட சில இடங்களில் மட்டுமே. பொது மக்களின் நலன் கருதி இது மேற்கொள்ளப்படுகிறது" என்றார்.

இஸ்ரேல் - ஹமாஸ் போர் தொடங்கி ஒருமாத காலம் ஆன நிலையில் காசா உருக்குலைந்துள்ளது. அங்கு இதுவரை 10 ஆயிரத்து 800-க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளதாக ஹமாஸ் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. இந்தச் சூழலில் மனிதாபிமான அடிப்படையில் போரை நிறுத்த இஸ்ரேலுக்கு பல தரப்பிலிருந்தும் அழுத்தம் கொடுக்கப்பட்டது. இந்தச் சூழலில் அன்றாடம் 4 மணி நேரம் காசாவில் முழுமையாக தாக்குதல் நிறுத்தப்படும். இது அங்குள்ள பிணைக் கைதிகளை விடுவிக்கவும், பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்குப் பெயரவும், நிவாரண உதவிகள் முகாம்களுக்கு சென்று சேரவும் உதவியாக இருக்கும் வகையில் எடுக்கப்பட்ட முடிவு என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார். இஸ்ரேல் தரப்பில் இதுவர 1400 பேர் உயிரிழந்துள்ளனர். 239 பேர் பிணைக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

## "சரியான திசையில் வைக்கப்பட்ட முதல் அடி"

# தினமும் 4 மணி நேரம் போர் நிறுத்தம் அறிவித்த இஸ்ரேலுக்கு அமெரிக்கா பாராட்டு





**வாஷிங்டன் : நவ. 11,**

**ஹமாஸுக்கு எதிரான போரில் தினமும் 4 மணி நேரம் இடைவெளி விடுவதாக இஸ்ரேல் தெரிவித்துள்ள நிலையில், அமெரிக்கா அதனை வரவேற்றுள்ளது.**

காசாவுக்கு வழங்கி வந்த மின்சாரம், எரிபொருள், குடிநீர் ஆகியவற்றை இஸ்ரேல் நிறுத்தி உள்ளது. இதனால், காசாவில் உள்ள மக்கள் தவித்து வருகிறார்கள். மேலும், காயமடைந்தவர்களுக்கு சிசிச்சை அளிப்பதிலும் நெருக்கடி நிலவுவதாகக் கூறப்படுகிறது. காசாவின் வடக்குப் பகுதியில் உள்ள மக்கள் தாக்குதலுக்கு இலக்காவதால், அவர்கள் அங்கிருந்து வெளியே செல்வதற்கு நேரம் கொடுக்கப்பட வேண்டும் என பலரும் வலியுறுத்தி வந்தனர். அப்போதுதான், அப்பாவி மக்கள் உயிரிழப்பது குறையும் என வலியுறுத்தப்பட்டது. இவற்றைக் கருத்தில் கொண்டு தற்காலிக போர் நிறுத்தத்தை இஸ்ரேல் அறிவிக்க வேண்டும் என்று அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் கோரிக்கை விடுத்துவந்தன.

இதன் எதிரொலியாக, தினமும் 4 மணிநேரம் வடக்கு காசாவில் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்படும் என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது. இஸ்ரேலின் இந்த அறிவிப்புக்கு அமெரிக்கா வரவேற்பு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அமெரிக்க வெள்ளை மாளிகை தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் ஒருங்கிணைப்பாளர் ஜான் கிர்பி கூறும்போது, "இஸ்ரேல் தனது முடிவை அறிவித்துள்ளது. அப்பாவி பாலஸ்தீன மக்கள் கொல்லப்படுவதைத் தடுக்கும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதேநேரத்தில், சர்வதேச சட்டங்களுக்கு முழுமையாக கட்டுப்படுவதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது. தொடர் போருக்கு மத்தியில் ஓர் இடைவெளி விடுவது என்ற இஸ்ரேலின் முடிவு சரியான திசையில் வைக்கப்பட்டுள்ள முதல் அடி. இதன் மூலம், அப்பாவி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்வதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்" என தெரிவித்துள்ளார்.

முன்னதாக, கடந்தமாதம் 7-ம் தேதி, காசாவில் உள்ள ஹமாஸ் தீவிரவாதிகள், இஸ்ரேலுக்குள் நுழைந்து குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் உள்ளிட்டோருக்கு எதிராக துப்பாக்கிச் சூடு நடத்தி கொலை செய்ததோடு, 240-க்கும் மேற்பட்டோரை கடத்திச் சென்று பிணைக் கைதிகளாக தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். ஹமாஸ் தீவிரவாதிகளின் தாக்குதலை அடுத்து, இஸ்ரேல் ராணுவம் பதிலடி கொடுத்து வருகிறது. இஸ்ரேல் தரப்பில் இதுவரை சுமார் 1,400 பேர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரத்தில், காசாவில் 10,000-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# எல்லையில் மதில் சுவர் கட்ட வேண்டும் அமெரிக்க அதிபர் வேட்பாளர் அதிரடி யோசனை



**மியாமி : நவ. 11,**

**அமெரிக்கா - கனடா எல்லையில் பாதுகாப்பு கருதி மதில் சுவர் கட்ட வேண்டும் என அமெரிக்க குடியரசு கட்சியின் அதிபர் வேட்பாளர்களில் ஒருவரான விவேக் ராமசாமி அதிரடியாக தெரிவித்துள்ளார்.**

கனடா எல்லையில் இருந்து அமெரிக்காவுக்குள் சட்டவிரோத ஆட்கடத்தல் மற்றும் சட்டவிரோத போதை மருந்து கடத்தல்கள் அதிகளவில் நடக்கிறது. இதைத் தடுக்கும் நோக்கில் அமெரிக்க குடியரசு கட்சியின் அதிபர் வேட்பாளர்களில் ஒருவரான விவேக் ராமசாமி இப்படி ஒரு தீர்வை முன்வைத்துள்ளார்.

அவ்வகையில், கனடா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையில் மதில் சுவர் எழுப்பப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். மியாமியில் நடைபெற்ற வேட்பாளர் தேர்வு விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் இதனை வலியுறுத்தினார். இது தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில், இவ்வாறு மதில் சுவர் உருவாக்கப்பட வேண்டும். தமது கட்சியின் எல்லைப் பாதுகாப்பு கொள்கை போதுமானதல்ல" என்றார்.

எதிர்வரும் அமெரிக்க அதிபர் தேர்தலில் குடியரசு கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்காக வேட்பாளர்கள் சிலர் கட்சிக்குள் தங்களுக்கான ஆதரவைமும்முரமாகதிரட்டி வருகின்றனர். அவ்வாறான வேட்பாளர்களில் ஒருவராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவரான விவேக் ராமசாமியும் ஒருவராக உள்ளார்.

## ஏர் இந்தியா விமானத்துக்கு குர்பத்வந்த் மிரட்டல் விடுத்த விவகாரம்

# மிக தீவிரமாக விசாரித்து வருவதாக கனடா தகவல்



**புதுடெல்லி : நவ. 11,**

**ஏர் இந்தியா விமானத்துக்குப் பகிரங்கமாக மிரட்டல் விடுத்து காலிஸ்தான் பயங்கரவாதி குர்பத்வந்த் சிங் பன்னுன் வெளியிட்ட வீடியோ இந்தியாவில் பெரும் சலசலப்பை ஏற்படுத்திய நிலையில், இது குறித்து தீவிரமாக விசாரித்து வருவதாக கனடா சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

நவம்பர் 5 ஆம் தேதி ஏர் இந்தியா விமானத்துக்குப் பகிரங்கமாக மிரட்டல் விடுத்து காலிஸ்தான் பயங்கரவாதி குர்பத்வந்த் சிங் பன்னுன் வீடியோ ஒன்றை வெளியிட்டார். பயங்கரவாதியாக அறிவிக்கப்பட்டுள்ள, சீக்கியர்களுக்கான நீதி என்ற (எஸ்எஃப்ஜெ) அமைப்பின் நிறுவனர் தான் இந்த குர்பத்வந்த் பன்னூன். இந்தியாவில் காலிஸ்தான் தனி நாடு கோரும் அனைத்து அமைப்புகளும் தடை செய்யப்பட்டுள்ளன. அதேபோல் தான் குர்பத்வந்தின் எஸ்எஃப்ஜெ அமைப்பும் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குர்பத்வந்த் சிங்கின் அந்த வீடியோவில், "நவம்பர் 19-க்கு பின்னர் சீக்கியர்கள் யாரும் ஏர் இந்தியா விமானத்தில் பறக்க வேண்டாம். உங்கள் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம். நவம்பர் 19 ஆம் தேதி உலக பயங்கரவாத கோப்பையின் (உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்) இறுதிப்போட்டி நடைபெற இருக்கிறது. அதன் பின்னர் பெரிய மாற்றங்கள் நிகழவுள்ளன.

டெல்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தின் பெயர் மாற்றப்படும். பஞ்சாப் விடுதலை அடைந்ததும் அந்த விமான நிலையத்தின் (இந்திராகாந்தி சர்வதேச விமானநிலையம்) பெயர் ஷாகித் பேனட் சிங், ஷாகித் ஷத்வந்த் சிங் காலிஸ்தான் விமான நிலையம் என்று மாற்றப்படும்" என்று கூறியுள்ளார். இது இந்தியாவில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது. இதையடுத்து, இந்திய அரசாங்கம் இது தொடர்பாக விசாரிக்குமாறு கனடாவுக்கு கோரிக்கையும் விடுத்திருந்தது.

இந்த நிலையில், சமூக வலைதளங்களில் பரப்பப்படும் அச்சுறுத்தல்கள் குறித்து கனடா விசாரித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. கனடா இந்த விவகாரத்தை மிக தீவிரமாக எடுத்துக் விசாரித்து வருவதாகவும், கனடா விமான நிலையங்களுக்குச் செல்லும் மற்றும் அங்கிருந்து இயக்கப்படும் ஏர் இந்தியா விமானங்களுக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது எனவும் சட்ட அமலாக்க துறை இந்த விஷயத்தில் ஏற்கெனவே விசாரணையை ஆரம்பித்துள்ளதாகவும் கனடா சார்பில் இந்தியாவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், அந்த வீடியோவில் வன்முறை எதுவும் இல்லை. எந்தவித அச்சுறுத்தலும் இல்லை என்று பன்னூன் மறுத்துள்ளார்.

மேலும் 1985-ம் ஆண்டு உலகை அதிரவைத்த ஏர் இந்தியா விமான தாக்குதலை காலிஸ்தானி பயங்கரவாதிகள் நிகழ்த்தினர். இதில் விபத்தில் 329 பேர் பலியாகினர். இது இன்றளவும் கொடூரமான தாக்குதலாக கருதப்படுகிறது.

# இருளை விலக்கி ஒளியை ஏற்படுத்துவதாக அமையட்டும்

## கமலா ஹாரிஸ் தீபாவளி வாழ்த்து



**வாஷிங்டன் : நவ. 11,**

**அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் வாஷிங்டனில் உள்ள தனது அரசு இல்லத்தில் தீபாவளி பண்டிகையை கொண்டாடினார். கமலா ஹாரிஸ் விடுத்த அழைப்பின் பேரில் 300-க்கும் அதிகமான விருந்தினர்கள் இந்த தீபாவளி கொண்டாட்டத்தில் பங்கேற்றனர். அவர்களில் பெரும்பாலானோர் இந்திய வம்சாவளியினர்.**

அப்போது பேசிய கமலா ஹாரிஸ், இஸ்ரேல்- ஹமாஸ் இடையே போர் நடைபெறும் சூழலில், உலகம் எதிர்கொண்டிருக்கும் இருண்ட மற்றும் கடினமான நிலைக்கு ஒளி ஏற்படுத்தும் வகையில் தீபங்களின் பண்டிகையான தீபாவளியைக் கொண்டாடுவது முக்கியம்.

இருளை விலக்கி ஒளியை ஏற்படுத்துவதாக இந்த தீபாவளி அமையட்டும். பாலஸ்தீனத்தில் மக்கள் அடைந்து வரும் துயரம் மாற வேண்டும். அதே நேரம், இஸ்ரேல் தன்னை தற்காத்துக் கொள்ள எடுக்கும் நடவடிக்கையை அமெரிக்கா ஆதரிக்கும் என தெரிவித்தார்.

## படுமோசமான பொருளாதாரம்

# லேமினேஷன் பேப்பர் பற்றாக்குறை, பாஸ்போர்ட் அச்சிட முடியாமல் தவிக்கும் பாகிஸ்தான்





**பாகிஸ்தான் : நவ. 11,**

**லேமினேஷன் பேப்பரின் பற்றாக்குறை காரணமாக பாகிஸ்தானில் லட்சக்கணக்கானோர் பாஸ்போர்ட் பெற முடியாமல் தவிக்கின்றனர், இதனால் பலரின் வெளிநாட்டுக் கனவு வீணாகி வருகிறது.**

பாகிஸ்தான் நாட்டின் பொருளாதாரம் நாளுக்கு நாள் மோசமடைந்து வருவது மட்டும் அல்லாமல் ஐஎம்எப் அமைப்பின் நிதியுதவியைப் பெற வேண்டும் என்பதற்காக வரி வருமானத்தை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் தள்ளப்பட்டு உள்ளது.

இதற்காக மக்களின் தினசரி பயன்பாட்டுப் பொருட்களில் வரியை அதிகரிப்பது மட்டும் அல்லாமல் அரசு அதிகாரிகள் முதல் அமைச்சர்கள், மக்களுக்குக் கிடைக்க வேண்டிய சேவைகள் வரையில் பல செலவுகளைக் குறைத்துள்ளது அந்நாட்டு அரசு.

ஐஎம்எப் அமைப்பின் நிதியுதவிக்காகப் பாகிஸ்தான் எடுத்த பல நடவடிக்கைகள் தற்போது அந்நாட்டு மக்களுக்குப் பாஸ்போர்ட் எடுக்கக் கூட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளனர். இதுமட்டும் அல்லாமல் பாகிஸ்தான் நாட்டில் நிலவும் பொருளாதார பிரச்சினை உலகளவில் பேசப்பட்டு வருகிறது.

பாகிஸ்தானிய குடிமக்கள் தற்போது புதிதாகப் பாஸ்போர்ட் எடுப்பதில் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இதற்கு முக்கியமான காரணம் பிரான்ஸ் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் லேமினேஷன் பேப்பரின் பற்றாக்குறையால் அந்நாட்டில் பெரும் சிக்கல் வெடித்துள்ளது. லேமினேஷன் பேப்பரின் பற்றாக்குறை காரணமாக லட்சக்கணக்கானோர் பாஸ்போர்ட் பெற முடியாமல் உள்ளனர். இதனால் பலரின் வெளிநாட்டுக் கனவு வீணாகி வருகிறது என அந்நாட்டு மக்கள் புலம்பித் தள்ளி வருகின்றனர்.

குறிப்பாகப் படிப்பு, வேலை அல்லது ஓய்வுக்காக வெளிநாடு செல்ல திட்டமிட்டிருந்த ஆயிரக்கணக்கான பாகிஸ்தான் குடிமக்களின் நிலைமை ஆபத்தில் உள்ளது இதுகுறித்து பாகிஸ்தான் நாட்டின் பத்திரிக்கையான தி எக்ஸ்பிரஸ் ட்ரிப்யூன் வெளியிட்ட செய்தியில் பாகிஸ்தானில் உள்ள குஜராத்தில் வசிக்கும் ஜெய்ன் இஜாஸ், இங்கிலாந்தில் படிக்க வேண்டும் என்ற நீண்ட நாள் கனவுடன் இருந்தார். அவர் இறுதியாக இங்கிலாந்தில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் அட்மிஷன் பெற்றார். ஆனால், அவரது பாஸ்போர்ட் பெறுவதில் ஏற்பட்டுள்ள தாமதம், அவரது கனவுகளைச் சிதைத்துவிடும் என்ற சோகத்தில் இருப்பதாகத் தெரிவித்திருந்தது.

## சிக்குன்குனியாவுக்கு உலகின் முதல் தடுப்பூசி

# அமெரிக்க சுகாதாரத் துறை அனுமதி





**அமெரிக்கா : நவ. 11,**

**சிக்குன்குனியாவுக்கான உலகின் முதல் தடுப்பூசிக்கு அமெரிக்க சுகாதார அதிகாரிகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஒப்புதல் அளித்துள்ளனர். இது பாதிக்கப்பட்ட கொசுக்களால் பரவும் ஒரு வகை வைரஸாகும். இதை உணவு மற்றும் மருந்து நிர்வாகம் "வளர்ந்து வரும் உலகளாவிய சுகாதார அச்சுறுத்தல்" என்று அழைத்தது குறிப்பிடத்தக்கது.**

Ixchiq என்ற பெயரில் விற்பனை செய்யப்படும் ஐரோப்பாவின் வால்னேவாவால் உருவாக்கப்பட்ட இந்த தடுப்பூசி, 18 வயது மற்றும் அதற்கு மேல், பாதிக்கப்படக்கூடிய அபாயம் உள்ளவர்களுக்கு செலுத்த அங்கீகரிக்கப்பட்டது என்று அமெரிக்க மருந்து கட்டுப்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது. அமெரிக்க மருந்து கட்டுப்பாட்டாளரின் இந்த ஒப்புதல், வைரஸ் பாதிப்பு பரவலாக உள்ள நாடுகளில் தடுப்பூசியின் வெளியீட்டை விரைவுபடுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காய்ச்சல் மற்றும் கடுமையான மூட்டு வலியை ஏற்படுத்தும் சிக்குன்குனியா, ஆப்பிரிக்கா, தென்கிழக்கு ஆசியா மற்றும் அமெரிக்காவின் ஒரு பகுதியின் வெப்பமண்டல மற்றும் மிதவெப்ப மண்டல பகுதிகளில் மிகவும் பரவலாக உள்ளது. "இருப்பினும், சிக்குன்குனியா வைரஸ் புதிய புவியியல் பகுதிகளுக்கு பரவியுள்ளது என்பது தான் அதிர்ச்சிதரும் செய்தி. இதனால் இந்த நோயின் உலகளாவிய பரவல் அதிகரிக்கிறது" என்று அமெரிக்க மருந்து கட்டுப்பாட்டு ஆணையம் கூறியது.


கடந்த 15 ஆண்டுகளில் 5 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இந்த வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். "சிக்குன்குனியா வைரஸ் தொற்று கடுமையான நோய் மற்றும் நீண்டகால உடல்நலப்பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும், குறிப்பாக வயதானவர்கள் மற்றும் இயல்பிலேயே உடல்நலக்குறைவு உள்ளவர்களை இது அதிகம் பாதிக்கும் என்று" அமெரிக்க மருந்து கட்டுப்பாட்டு ஆணையத்தில் மூத்த அதிகாரி பீட்டர் மார்க்ஸ் ஒரு அறிக்கையில் தெரிவித்தார்.

இந்நிலையில் இன்றைய இந்த ஒப்புதல் ஒரு மருத்துவ தேவையைநிவர்த்திசெய்கிறது மற்றும் வரையறுக்கப்பட்ட சிகிச்சை விருப்பங்களுடன், நோயை பலவீனப்படுத்தும், நோய் தடுப்பு யுக்தியில் இது ஒரு முக்கியமான முன்னேற்றமாகும்.

தடுப்பூசி ஒரு டோஸில் செலுத்தப்படுகிறது மற்றும் மற்ற தடுப்பூசிகளுடன் நிலையானது போல, சிக்குன்குனியா வைரஸின் நேரடி, பலவீனமான பதிப்பைக் கொண்டுள்ளது. வட அமெரிக்காவில் 3,500 பேரிடம் இரண்டு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. தலைவலி, சோர்வு, தசை மற்றும் மூட்டு வலி, காய்ச்சல் மற்றும் குமட்டல் ஆகியவை பொதுவாக உள்ள பக்கவிளைவுகள் என்று அறிவிக்கப்பட்டது. மேலும் சோதனைகளில் Ixchiq பெறுநர்களில் 1.6 சதவிகிதம் பேருக்கு தீவிரமான எதிர்வினைகள் பதிவாகியுள்ளன, இருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

## சூடான் உள்நாட்டுப் போரில் பலியாகும் பழங்குடியினர்

# 2 நாளில் 700 பேர் உயிரிழப்பு



**சூடான் : நவ. 11,**

**சூடானில் ராணுவத்தினருக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையேயான போரில் 2 நாளில் 700க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

சூடானில் ராணுவத்தினருக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடந்த 7 மாதங்களாக உள்நாட்டு போர் நடைபெற்று வருகிறது. அதிவிரைவு துணை ராணுவப்படை என்ற அமைப்பு தங்களையும் ராணுவத்தினர் என அறிவிக்க வேண்டும் என கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

இதற்கு ராணுவம் எதிர்ப்பு தெரிவித்ததால் இரு தரப்புக்கும் இடையே நேரடி துப்பாக்கி சண்டைகள் நடைபெற்று வருகிறது. இதன் காரணமாக ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ள நிலையில், ஏராளமானோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

லட்சக்கணக்கான பொதுமக்கள் உள்நாட்டிலேயே அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர். தற்போதைக்கு இந்த உள்நாட்டு போர் முடிவுக்கு வருவதற்கான வாய்ப்புகள் இல்லை என்ற நிலையே நிலவி வருகிறது.

இந்நிலையில் கடந்த 4 மற்றும் 5 ஆகிய தேதிகளில், மேற்கு டார்ஃப்ர் என்ற இடத்தில் இரு தரப்புக்கும் இடையே நிகழ்ந்த போரில் 700க்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்து இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ள நிலையில், 300-க்கும் மேற்பட்டோர் மாயமாகி உள்ளனர்.

துணை ராணுவ படையினர், பிரதான பழங்குடியினரான எல் ஜெனைனா பழங்குடிகளை குறிவைத்து தாக்குதலில் ஈடுபட்டு வருவதாக ராணுவம் குற்றம்சாட்டியுள்ளது. மேலும் இது இன அழிப்பு எனவும் ராணுவம் குற்றம்சாட்டி வருகிறது. ஆனால் இந்த தகவலை மறுத்துள்ள துணை ராணுவ படையினர், பழங்குடிகளின் உயிரிழப்பிற்கு தங்கள் அமைப்பு காரணம் அல்ல என தெரிவித்துள்ளது.

இரு தரப்புக்கும் இடையே கடந்த செவ்வாய்க்கிழமை ஜெடா நகரில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் முடிவு எட்டப்படவில்லை. இந்நிலையில் புலம்பெயர்ந்த மக்கள் தங்கி இருக்கும் தற்காலிக முகாம்களின் மீது குண்டு வீச்சு தாக்குதல் நடைபெற்று வருவதால் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.



▶ தீபாவளி பண்டிகையையொட்டி நேற்றைய தினம் புதுக்கோட்டை கீழ ராஜ வீதியில் வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்கிச் செல்ல ஏராளமான மக்கள் குவிந்திருந்ததையும் அதனை கண்காணிப்பு கேமராக்கள் மூலம் புற காவல் நிலையத்திலிருந்து கண்காணிக்கும் பணியில் காவல்துறையினர் ஈடுபட்டிருப்பதையும் படத்தில் காணலாம்

# புதுக்கோட்டை வைரம்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் தீபாவளி கொண்டாட்டம்

புதுக்கோட்டை, நவ.11–

புதுக்கோட்டை வைரம்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நேற்று தீபாவளியை முன்னிட்டு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது, இதில் 1 ம் வகுப்பு முதல் 5 ம் வகுப்பு வரை உள்ள மாணவர்கள் ஆடல் பாடல் மற்றும் விழிப்புணர்வு நாடகம் ஆகிய கலைநிகழ்ச்சிகளை வழங்கினர்., அனைத்து மாணவர்களும், ஆசிரியர்களும் தீபம் ஏற்றி நடனமாடி, பட்டாசுகளை வெடித்து விழாவினைச் சிறப்பாக கொண்டாடினர்.





இந்நிகழ்வில் பள்ளியின் தலைவர் தேனாள் சுப்ரமணியன் பள்ளியின் நிர்வாக ஒருங்கிணைப்பாளர் அஸ்வினி நாச்சம்மை பள்ளியின் முதல்வர் சிராஜுதீன், துணை முதல்வர் சுப்ரமணியன் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். பள்ளி நிர்வாகத்தினர், ஆசிரியர்கள்,மாணவர்கள் அனைவருக்கும்தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்ந்தனர்.



▶ புதுக்கோட்டை சாரதா மோட்டார்ஸ் சார்பில் தீபாவளி எக்சேஞ்ச் & லோன் திருவிழா கம்பெனி வளாகத்தில் நடைபெற்று வருகிறது. புதிதாக டிவிஎஸ் வாகனம் வாங்கும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் ரூபாய் 3000 வரை சிறப்பு தள்ளுபடி வழங்கப்படுகிறது. இந்த சலுகை நவம்பர் 15 ஆம் தேதி வரை இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதுக்கோட்டையில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தை அமைச்சர்கள் ரகுபதி மற்றும் மெய்யநாதன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்





புதுக்கோட்டை,நவ.11–

தமிழ்நாடு முதலமைச்சர் நேற்று சென்னை கலைவாணர் அரங்கத்தில், நடைபெற்ற விழாவில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் களஆய்வு நிலுவையில் இருந்த விண்ணப்பங்கள் இறுதி செய்யப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய பயனாளிகளான மகளிருக்கு உரிமைத் தொகை வழங்கிடும் விதமாக மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து புதுக்கோட்டை மாவட்டம், கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மற்றும் கந்தர்வக்கோட்டை பேருந்துநிலையம் எதிரில் செங்கிப்பட்டி சாலையில் உள்ள சண்முகா திரையரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா உடனிருந்தார், தமிழ்நாடு அரசின் 2023-24ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் 'மகளிருக்குச் சொத்துரிமையும் உள்ளாட்சி அமைப்புகளில் தனி இடஒதுக்கீடு அளித்தது முதல் தற்போது கட்டணமில்லாப் பேருந்து பயணம் வழங்கியது வரை மகளிரின் நலன் காத்து உரிமைகளை நிலைநாட்டுவதில் எப்போதும் அக்கறையுடன் இவ்வரசு செயல்பட்டு வருகிறது, அந்த வரிசையில் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியில் அறிவித்தபடி, தகுதிவாய்ந்த குடும்பங்களின் குடும்பத் தலைவிகளுக்கு வரும் நிதியாண்டில் மாதம் 1,000 ரூ;பாய் உரிமைத் தொகையாக வழங்கப்படும். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டான இந்த ஆண்டில் திராவிட இயக்க மாதம் என சொல்லத்தக்க செப்டம்பர் மாதத்தில் தாய் தமிழ்நாட்டின் தலைமகன் - பேரறிஞர் பெருமகன் அறிஞர் அண்ணா பிறந்தநாளான செப்டம்பர் மாதம் 15 ஆம் நாள் முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிகளில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம். சின்னத்துரை முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன் மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் வள்ளியம்மை தங்கமணி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) மு.செய்யது முகம்மது, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் க.ஶ்ரீதர் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜி.அமீர் பாஷா, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் சாந்தி புதுக்கோட்டை வட்டாட்சியர் கவியரசன், கந்தர்வக்கோட்டை வட்டாட்சியர் ராமசாமி, கந்தர்வக்கோட்டை ஊராட்சிமன்றத் தலைவர் தமிழ்செல்வி வெள்ளாளவிடுதி ஊராட்சிமன்றத் தலைவர் பரமசிவம் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.


## புதுக்கோட்டை மாவட்டம்
## கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியம்

ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களின்
அடிப்படை தேவைகளான குடிநீர் வசதி, சாலை வசதி,
கழிவுநீர் வாய்க்கால் இணைப்பு பாலங்கள் மற்றும்
சுகாதரப்பணிகளை ஒன்றியத்தில் உள்ள
ஊராட்சிகளுடன் இணைந்து வளர்ச்சி பணிகள்
சிறப்புடன் செயல்படுத்தபட்டு வருகிறது

திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா இ.ஆப.
மாவட்ட ஆட்த்தலைவர் , புதுக்கோட்டை

திரு.எம்.சின்னத்துரை எம்.எல்.ஏ
கந்தர்வகோட்டை சட்டமன்ற தொகுதி

திருமதி.நா.கவிதப்பிரியா
இணை இயக்குநர் / திட்ட இயக்குநர்
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை புதுக்கோட்டை

திரு.ரெ.ரத்தினவேல் (எ) கார்த்திக் மழவராயர்
ஒன்றிய பெருந்தலைவர் , கந்தர்வகோட்டை

திருமதி.த.திலகவதி
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
ஊராட்சி ஒன்றியம், கந்தர்வகோட்டை

திரு.எஸ்.பால் பிரான்சிஸ்
வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)
ஊராட்சி ஒன்றியம், கந்தர்வகோட்டை

திருமதி.வ.செந்தாமரை
ஒன்றியக்குழு துணைத்தலைவர்


ஒன்றிய குழு உறுப்பினர்கள்

திருமதி.க.பரிமளா, திருமதி.ப.நதியா, திருமதி.செ.வைரக்கண்ணு திருமதி.கா.கோவிந்தராசு,
திருமதி.சி.மலர், திரு.ஆர்.கலியபெருமாள், திரு.பு.பாண்டியன் திரு.மா.ராஜேந்திரன்,
திருமதி.அ.பாரதிபிரியா, திரு.ம.முருகேசன், திருமதி.ரா.சுதா திரு.அ.திருப்பதி

ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள்மற்றும் பணியாளர்கள்
கந்தர்வகோட்டை



## கந்தர்வகோட்டை ஊராட்சி
## கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியம்
## புதுக்கோட்டை மாவட்டம்



ஊராட்சி பகுதியில் வசிக்கும்
பொதுமக்களின் அடிப்படை தேவைகளான

குடிநீர் வசதி, சாலை வசதி,
தெருவிளக்கு பராமரிப்பு மற்றும்
சுகாதாரப்பணிகளை தொடர்ந்து
சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது





திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா இ.ஆப.
மாவட்ட ஆட்த்தலைவர் , புதுக்கோட்டை

திரு.எம்.சின்னத்துரை எம்.எல்.ஏ
கந்தர்வகோட்டை சட்டமன்ற தொகுதி

திருமதி.நா.கவிதப்பிரியா
இணை இயக்குநர் / திட்ட இயக்குநர்
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை புதுக்கோட்டை

திரு.ரெ.ரத்தினவேல் (எ) கார்த்திக் மழவராயர்
ஒன்றிய பெருந்தலைவர் , கந்தர்வகோட்டை

திருமதி.த.திலகவதி
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
ஊராட்சி ஒன்றியம், கந்தர்வகோட்டை

திரு.எஸ்.பால் பிரான்சிஸ்
வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)
ஊராட்சி ஒன்றியம், கந்தர்வகோட்டை



சி.தமிழ்ச்செல்வி
ஊராட்சி மன்றத் தலைவர்,
கந்தர்வகோட்டை ஊராட்சி

மா.வெங்கடேஷ் BE.,
ஊராட்சி மன்றத் துணை தலைவர்,
கந்தர்வகோட்டை ஊராட்சி



வார்டு உறுப்பினர்கள்

இன்பவள்ளி வடிவேல், எஸ்.செந்தில்குமார், இந்திரகாந்தி கருணாநிதி, நிரோஜா சுரேஷ்,
வினோதாசுவாமிநாதன், எம்.ரவி, மணிமேகலை மூக்கையா, ஜி.முத்துராமன்,
சையது முகமது ரசூல், அகிலா சீனிவாசன், ஜி.ஆனந்த்

ஊராட்சி செயலாளர் .டி.ரவிசந்திரன் / OHT ஆப்ரேட்டர்கள், தூய்மை பணியாளர்கள்

கந்தர்வகோட்டை ஊராட்சி , கந்தர்வகோட்டை ஒன்றியம்


PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

# விபத்தில்லா தீபாவளி வீடுதோறும் மகிழ்ச்சி வேலூரில் மாணவிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி

வேலூர்,நவ,11



வேலூர் மாவட்டம் காட்பாடி அரசுபெண்கள் மேல்நிலைப் பள்ளியில் விபத்தில்லா தீபாவளி வீடுதோறும் மகிழ்ச்சி எனும் தலைப்பில் வேலூர் மாவட்ட பள்ளிக்கல்வித்துறையும் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணி துறையின் காட்பாடி நிலையம் இணைந்து தீபாவளியை மகிழ்ச்சியாக கொண்டாடுதல், தீக்காயங்களை தவிர்த்தல் மற்றும் தீக்காயங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்த செயல் விளக்கம் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

பள்ளியின் தலைமை ஆசிரியர் கோ.சரளா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் ஜுனியர் ரெட்கிராஸ் மாவட்ட அமைப்பாளர் செ.நா.ஜனார்த்தனன் வரவேற்று பேசினார். உதவி தலைமை ஆசிரியர் எம்.மாரிமுத்து, கே.திருமொழி ஆகியோர் முன்னிலையில், காட்பாடி தீயணைப்பு மீட்பு பணித்துறையின் நிலைய அலுவலர் வி.பால்பாண்டி, சிறப்பு நிலைய அலுவலர்கள் எஸ்.முருகேசன், ஆர்.கோபலகிருஷ்ணன், தீயணைப்பு வீரர்கள் வி.தீரன், என்.பழனி, எஸ்.பிரகாஷ் ஆகியோர் செயல் விளக்கம் அளித்தனர்.

பள்ளியின் நாட்டு நலப்பணி திட்ட, ஜுனியர் ரெட் கிராஸ் இயக்க, மாணவர் காவல் படை மாணவர்கள் உள்ளிட்ட பள்ளி இணை செயல்பாடுகளின் மாணவர்கள் பங்கேற்று விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். பின்னர் பட்டாசுகளை பாதுகாப்பாக வெடிப்பது குறித்து பள்ளி மாணவிகள் பயிற்சி பெற்றனர். பாதுகாப்பாக பட்டாசுகளை வெடிப்பது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக பள்ளி மாணவிகள் பட்டாசுகளை வெடித்து மகிழ்ந்தனர்.



▶ காரைக்கால் மாவட்டத்தில் 01.01.2024 தேதியில் 18-வயதை பூர்த்தி அடைந்த அனைவரும் புதிய வாக்காளராக சேர்வதற்கான தகுதி உள்ளவர்கள். இவர்களை ஊக்குவிக்கும் வண்ணமும், நவம்பர் 18 ,19 சனி மற்றும் ஞாயிறு கிழமைகளில் நடைபெறும் சிறப்பு முகாம்களில் புதிய வாக்காளர் பெயர் சேர்த்தல், பெயர் திருத்தம், முகவரி மாற்றம் போன்றவற்றிற்காக முறையான வாக்காளர் கல்வி மற்றும் தேர்தல் பங்கேற்பு உறுப்பினர்கள் மூலம் உருவாக்கப்பட்ட குறும்படமானது மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில்துனை ஆட்சியர் மற்றும் துணை மாவட்ட தேர்தல் அதிகாரி செந்தில்நாதன், காரைக்கால் மாவட்ட தேர்தல் துறை ஸ்லீப் ஒருங்கிணைப்பாளர் தாமோதரன் மற்றும் உதவி தேர்தல் பதிவு அதிகாரி செல்லமுத்து மற்றும் பலர் கலந்து கொண்டனர்,

# தீபத்திருவிழாவிற்கு தயாராகும் திருவண்ணாமலை கோவில்

திருவண்ணாமலை நவ.11.



திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் ராஜகோபுரம் உள்ளிட்ட கோபுரங்கள் ராட்சத கிரேன் மூலம் தண்ணீர் பீய்ச்சி அடிக்கப்பட்டு தூய்மைபடுத்தப்பட்டது.

திருவண்ணாமலையில் அமைந்துள்ள புகழ்பெற்ற அருணாச்சலேஸ்வரர் கோயில் பஞ்சபூத தலங்களில் அக்னி தளமாகும். இங்கு ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் பல்லாயிரகணக்கானோர் வந்து கிரிவலம் சென்று வழிபடுவது வழக்கம். ஆண்டுதோறும் இங்கு கார்த்திகைதீபத்திருவிழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவில் இந்தியா மட்டுமின்றி வெளிநாடுகளில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று சாமி தரிசனம் செய்வார்கள்.

இவ்வாண்டு, அடுத்து வரும் கார்த்திகை தீபத் திருவிழாவையொட்டி கோயிலை சுத்தப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. கோயிலின் கோபுரங்கள் அனைத்தும் தண்ணீர் கொண்டு சுத்தம் செய்யப்பட்டுள்ளது. 25 ஏக்கர் பரப்பளவில் பிரம்மாண்டமாக அமைந்துள்ள அண்ணாமலையார் கோயிலில், 9 கோபுரங்கள், 6 பிரகாரங்கள், 142 சன்னிதிகள், 22 விநாயகர்கள் மற்றும் 43 செப்புச் சிலைகளை தூய்மை படுத்தும் பணி விறுவிறுப்புடன் நடைபெற்று வருகிறது.

இதில் கோயிலின் கிழக்கு திசையில் தமிழ்நாட்டின் நீண்ட பெரிய 2வது கோபுரமான, 217 அடி உயரத்தில், 11 நிலைகளுடன் அமைந்துள்ள "ராயர் கோபுரம்" என்றழைக்கப்படும் ராஜகோபுரம் தூய்மை படுத்தும் பணி நடைபெற்று முடிந்துள்ளது. ராட்சச கிரேன் மூலமாக தீயணைப்புத்துறையினர் தண்ணீரை பீய்ச்சி அடித்து ராஜகோபுரத்தை தூய்மைபடுத்தினர். இதை தொடர்ந்து கோயிலை அலங்கரிக்கும் பணியும் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

# புதிய அமைச்சர் விரைவில் நியமனம் புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி தகவல்

புதுச்சேரி : நவ. 11, புதுச்சேரியில் புதிய அமைச்சர் விரைவில் நியமனம் செய்யப்படுவார் என்று அம்மாநில முதல்வர் ரங்கசாமி கூறியுள்ளார். அவர் நேற்று செய்தியாளர்களிடம் கூறியது: "புதுவை மாநில மக்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துகள். அனைவரும் அனைத்து வளமும் பெற்று சீரும், சிறப்புமாக வாழ வாழ்த்துகள். புதுவை மாநில மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழ எமது அரசு சார்பில் நல்வாழ்த்துக்கள். புதுவை அரசு மக்களுடைய அரசு. மக்கள் நலனுக்காக பாடுபடும் அரசு. மக்களுக்காக கொண்டு வரும் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்துகிறோம்.

இந்த அரசு பொறுப்பேற்றவுடன் பல புதிய திட்டங்களை கொண்டு வந்து நிறைவேற்றியுள்ளது. குடும்பத் தலைவிக்கு ஆயிரம் ரூபாய், பெண் குழந்தைகளுக்கு ரூ.50 ஆயிரம் வைப்பு நிதி, சிலிண்டருக்கு மானியம், விபத்து காப்பீடு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாணவர்களுக்கு லேப்டாப் விரைவில் வழங்கப்படும். உள் கட்டமைப்பை மேம்படுத்தும் அனைத்து பணிகளும் பொதுப் பணித்துறை, உள்ளாட்சித் துறை மூலம் நடந்து வருகிறது. மேம்பாலங்கள், தார் சாலைகள் அமைக்கும் பணி துரிதமாக நடந்து வருகிறது. அனைத்து சமுதாய மக்களுக்கும் நலத்திட்ட உதவிகள் அனைத்தும் காலத்தோடு வழங்கப்பட்டு வருகிறது. புதிதாக நர்சிங் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது. காரைக்காலில் அரசு மருத்துவ கல்லூரி தொடங்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

தாழ்த்தப்பட்டோர், மீனவர்கள், பிற்படுத்தப்பட்டோர், கட்டிட தொழிலாளர்கள், விவசாயிகள் உட்பட புதுவை மாநில மக்கள் அனைவருக்கும் உரிய திட்டங்களை சிறப்பாக செயல்படுத்த வேண்டும் என்பதே அரசின் எண்ணம். சுற்றுலாவை மேம்படுத்தவும், பயணிகளை ஈர்க்கும் வகையிலும் திட்டங்களை கொண்டுவர அரசு கவனம் செலுத்தி வருகிறது. ஆன்மிகம், கல்வி, மருத்துவ சுற்றுலாவை மேம்படுத்த அரசு கவனம் செலுத்தி வருகிறது. புதுவைக்கு வரும் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்துதர அரசு செயல்பட்டு வருகிறது. புதுவை மக்கள் மகிழ்ச்சியோடு வாழும் நிலையில் மாநில மக்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்.

புதுவையில் புதிய அமைச்சர் விரைவில் நியமிக்கப்படுவார். புதுவை மருத்துவ கல்லூரிகளில் எப்படி மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். வெளிப்படைத் தன்மையோடு சென்டாக் மூலம் மருத்துவ படிப்புக்கு மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். முதல்வரும் தலைமைச் செயலரும் இணக்கமாக செயல்படுவது தொடர்பாக ஆளுநர் தெரிவித்துள்ளதை பற்றி கேட்கிறீர்கள். புதுவை மாநில வளர்ச்சிக்காக அரசு எடுக்கும் முடிவுகள் அனைத்தும் விரைவாக செயல்படுத்தப்பட வேண்டும் என்பதே அரசின் எண்ணம். இதனடிப்படையில் அனைவரும் செயல்பட வேண்டும். புதுவைக்கு புதிய சட்டமன்றம் அவசியம். கட்டுவோம். அதிகாரிகள் விரைவாக செயல்பட வேண்டும் என்பதே அரசின் எண்ணம். இது தொடர்பாக சட்டப் பேரவையில் எம்.எல்.ஏ-க்கள் பேசியுள்ளனர். புதுவை அரசின் நிலை என்ன என அனைவரும் அறிந்தது. இந்த நிலை மாற வேண்டும் என்பதே அரசின் எண்ணம்" என்று புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி கூறினார்.



▶ சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடந்த கலைஞர் நூற்றாண்டு இலக்கிய விழாவில் தமிழ்ச் சங்கங்களின் கூட்டியக்க அமைப்பாளர் கவிஞர் பேரா தயாரித்த சிறப்பு மலரை மருத்துவர் ஜெய.ராஜமூர்த்தி வெளியிட்டார். அருகில் கவிஞர் நெல்லை ஜெயந்தா,மேனாள் நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் விஜிலா சத்தியானந்த் உட்பட தமிழ்ச் சங்க நிர்வாகிகள் உள்ளனர்.

# சாமி தனக்கு எதுவும் செய்யவில்லை என ஆத்திரம்!: கோயிலுக்குள் பெட்ரோல் குண்டு வீசிய நபர் கைது..!!

பாரிமுனை,நவ,11





சென்னை பாரிமுனையில் கோயிலுக்குள் பெட்ரோல் குண்டு வீசிய நபர் கைது செய்யப்பட்டார். சென்னை பாரிமுனை கோவிந்தப்ப நாயக்கன் தெரு ஜங்ஷனில் ஸ்ரீ வீரபத்ர சுவாமி தேவஸ்தான கோயில் செயல்பட்டு வருகிறது. நேற்று காலை வழக்கம் போல் கோயில் அர்ச்சகர் கோயிலை திறந்து பூஜைகளில் ஈடுபட்டிருந்த போது, வீரபத்ர சாமி கோயில் அருகே ஜிகே டிரேடர்ஸ் என்ற கடை வைத்து நடத்தி வரும் முரளிகிருஷ்ணா என்பவர் சாமி கும்பிட வந்துள்ளார். சிறிது நேரத்தில், சாமி தனக்கு எதுவும் செய்யவில்லை என்ற ஆத்திரத்தில் பீர் பாட்டிலில் பெட்ரோலை ஊற்றி தீ வைத்து கோயில் உள்ளே சென்று முரளிகிருஷ்ணா வீசியுள்ளார். இதில் உடனடியாக அப்பகுதியில் தீ பற்றி எறியவே கோயில் அர்ச்சகர் உடனே வெளியேஓடிவந்துள்ளார்.

தொடர்ந்து இச்சம்பவம் குறித்து போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, பெட்ரோல் குண்டு வீசிய முரளிகிருஷ்ணாவை கொத்தவால்சாவடி போலீசார் கைது செய்து விசாரணைமேற்கொண்டு வருகின்றனர்.பெட்ரோல் குண்டு வீசிய நபர் மதுபோதையில் தாக்குதல் நடத்தியிருப்பது தெரியவந்துள்ளது. மேலும் முரளிகிருஷ்ணா சரித்திராபதிவேடு குற்றவாளி என்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# வேலூரில் டாஸ்மாக் கடை மீது காலி மதுபாட்டில்களை வீசி போதையில் அட்டகாசம். மதுக்கடை மூடல்

வேலூர் நவ.11.



வேலூர் புதிய பேருந்து நிலையத்தின் எதிரில் தமிழக அரசின் டாஸ்மாக் மதுபானக்கடை இயங்கி வருகிறது. பேருந்து நிலையத்தின் அருகில் இருப்பதால் எப்போதுமே இந்த டாஸ்மாக் கடை மது பிரியர்கள் கூட்டத்தால் நிரம்பி வழியும். இந்நிலையில் 9ம் தேதி மாலை இங்கு மது குடித்து கொண்டிருந்த சிலர் காலி மதுபாட்டில்களை டாஸ்மாக் கடை மீது வீசி போதையில் அட்டகாசத்தில் ஈடுபட்டனர். காலி பாட்டில்கள்வீசப்பட்டதில் மின்சாதனப் பொருட்கள் மீது பட்டு அவை உடைந்ததுடன் மின்சாரமும்தடைபட்டது.

இதனால் டாஸ்மாக் கடையை இழுத்து மூடிய ஊழியர்கள் தங்களுக்கு பாதுகாப்பு வழங்க கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது மது வாங்கி குடிக்க வந்த மதுப்பிரியர்கள் டாஸ்மாக் கடை மூடப்பட்டிருப்பது கண்டு அதிர்ச்சி அடைந்தனர். பலரும் ஏமாற்றமடைந்து திரும்பிச் சென்றனர்.

இதனிடையே கடையை திறக்க கோரி சிலர் டாஸ்மாக் ஊழியர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து அங்கு வந்த காவல்துறையினர் பேச்சுவார்த்தை நடத்தி சமாதானம் செய்ததை அடுத்து கடை மீண்டும் திறக்கப்பட்டது.

## திருவள்ளூர் வடக்கு மாவட்ட பாமக சார்பில்

# அறிவு சார் நகரம் அமைப்பதை கண்டித்து ஊத்துக்கோட்டையில் கண்டன ஆர்ப்பாட்டம்

ஊத்துக்கோட்டை, நவ11–





திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், வடமதுரை ,கல்பட்டு,மாளந்தூர் ,வெங்கல் உள்ளிட்ட ஊராட்சிகளை சேர்ந்த சுமார் 1,703 ஏக்கர் பரப்பளவில் அறிவு சார் நகரம் அமைக்க தமிழக அரசு உரிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மூன்று போகம் விளையக்கூடிய விவசாய நிலங்களை கையகப்படுத்தினால் விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு தொகை கிடைக்காது. விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறி ஆகும் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில், இத்திட்டத்தைப் இப்பகுதியில் செயல்படுத்துவதை கைவிட வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சி தலைவர்கள் ராமதாஸ்,அன்புமணி உள்ளிட்ட தலைவர்கள் கண்டன அறிக்கை மூலம் தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தி இருந்தனர். இந்நிலையில்,திருவள்ளூர் வடக்கு மாவட்ட பாமக சார்பில் அறிவு சார் நகரம் அமைக்கும் திட்டத்தை உடனடியாக கைவிடக்கோரி ஊத்துக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்திற்குசெல்லும் வழியில் திருவள்ளூர் வடக்கு மாவட்ட பாமக செயலாளர் பிரகாஷ் தலைமையில் விவசாய சங்கத் தலைவர் முனுசாமி, ஒன்றிய செயலாளர் ஜெயபால், ஆவாஜிபேட்டை பிரபாகரன், மாவட்ட இளைஞர் சங்கர் செயலாளர் சுதாகர், மாவட்ட இளைஞர் சங்கத் தலைவர் அன்பு, மாவட்ட வன்னியர் சங்க செயலாளர் டில்லி பாபு,மாவட்டத்துணைச் செயலாளர் தனசேகர் ஆகியோர் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இத்திட்டத்தை கைவிடவில்லை என்றால் பாமக தலைவர் ராமதாஸ் தலைமையில் திருவள்ளூர் மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று கண்டன ஆர்ப்பாட்டத்தின்போது கூறினர். இந்த ஆர்ப்பாட்டத்தில், திருவள்ளூர் வடக்கு மாவட்ட பாமகவினர் மற்றும் கிராம பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு தமிழக அரசுக்கு எதிராகவும், அறிவு சார் நகர திட்டத்துக்கு எதிராகவும் கண்டன கோஷங்களை எழுப்பி தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதன் பின்னர், ஊர்வலமாகச் சென்று ஊத்துக்கோட்டை தாசில்தார் அலுவலகத்தில் தங்களது கோரிக்கை மனுவை வழங்கினர். இப்பிரச்சனையால் சுமார் 3 மணி நேரம் இப்பகுதியில் பதட்டமும், பரபரப்பு நிலவியது.

# எதிர்க்கட்சி துணைத் தலைவராக ஆர்.பி.உதயகுமாரை அங்கீகரிக்க கோரிய வழக்கு : சபாநாயகர் பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு

சென்னை : நவ. 11, எதிர்க்கட்சி துணைத் தலைவராக ஆர்.பி.உதயகுமாரை அங்கீகரிக்க கோரிய வழக்கில், வரும் டிச.12ம் தேதிக்குள் சட்டமன்ற செயலாளர், சபாநாயகர் ஆகியோர் பதிலளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், அதிமுக பொதுச் செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்துள்ள மனுவில், "கடந்த 2021-ம் ஆண்டு நடந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் 66 அதிமுக எம்எல்ஏக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சட்டமன்றத்தில் இரண்டாவது பெரிய கட்சியாக அதிமுக உள்ளது. 2021-ம் ஆண்டு மே மாதம் நடந்த அதிமுக எம்எல்ஏக்கள் கூட்டத்தில், எதிர்க்கட்சி தலைவராக நானும், துணைத் தலைவராக ஓ.பன்னீர்செல்வமும் தேர்ந்தெடுக்கபட்டோம். முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி எதிர்க்கட்சி கொறடாவாகவும்,எஸ்.ரவி துணை கொறடாவாகவும் தேர்ந்தெடுக்கபட்டனர். சட்டமன்ற கட்சியின் செயலாளராக அன்பழகன் மற்றும் துணை செயலாளராக மனோஜ் பாண்டியனும் தேர்ந்தெடுக்கபட்டனர்.

2022-ம் ஆண்டு ஜுலை 11-ம் தேதி நடைபெற்ற அதிமுக பொதுக்குழுக் கூட்டத்தில் சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஓ.பன்னீர்செல்வம், மனோஜ் பாண்டியன், வைத்திலிங்கம் ஆகியோர் கட்சியிலிருந்து நீக்கபப்பட்டனர். இதைத் தொடர்ந்து, 2022-ம் ஆண்டு, ஜுலை17-ல் கட்சியின் எதிர்க்கட்சி துணை தலைவராக ஆர்.பி. உதயக்குமார், துணைச் செயலாளராக அக்ரி கிருஷ்ண்மூர்த்தியை நியமித்து சபாநாயருக்கு



கடிதம் அனுப்பி வைத்தோம். 5 முறை நினைவூட்டல் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது. ஆனால், அந்த கோரிக்கையின் மீது சபாநாயகர் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எதிர்க்கட்சித்துணைத் தலைவர் இருக்கையை மாற்றியமைக்க சபாநாயகரிடம் முறையிட்டோம். அது தொடர்பாகவும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதிமுகவில் இருந்து நீக்கபட்டவர்கள் தொடர்ந்து அதிமுக உறுப்பினர்களுடன் அமர்ந்து இருப்பதால், விவாதங்களின் போது அதிமுகவினரால் திறமையாக செயல்பட முடியவில்லை. எனவே, கட்சியில் இருந்து சட்டமன்ற பதவிகளுக்கு புதிதாக தேர்ந்தெடுக்கபட்டவர்களை அங்கீகரிக்க, சபாநாயகர் மற்றும் சட்டமன்ற செயலாளருக்குஉத்தரவிட வேண்டும். அதேபோல், எதிர்க்கட்சி துணைத் தலைவர் இருக்கையை மாற்றியமைக்க சபாநாயகருக்குஉத்தரவிட வேண்டும் எனவும் மனுவில் கோரியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி அனிதா சுமந்த் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது எடப்பாடி பழனிச்சாமி தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் விஜய் நாராயண், "சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவராக ஆர்.பி.உதயகுமாரும், துணைச் செயலாளராக அக்ரி கிருஷ்ணமூர்த்தி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். எனவே, அவர்களுக்கு உரிய இருக்கை ஒதுக்கி அங்கீகரிக்க கோரி 20 முறை நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பியும், சபாநாயகர் எந்த நடவடிக்கை எடுக்கவில்லை" என வாதிட்டார்.


இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, இந்த மனுவுக்கு சட்டமன்ற செயலாளர், சபாநாயகர் ஆகியோர் வரும் டிசம்பர் 12-ம் தேதிக்குள் பதிலளிக்க உத்தரவிட்டு, விசாரணையை அன்றைய தினத்துக்கே தள்ளிவைத்தார்.



# தொண்டில் தொய்வு இருக்கக் கூடாது என்பதால் மக்களை தொடர்ந்து சந்தித்து வருகிறேன்

# புதுக்கோட்டை வழியாக இலங்கைக்கு போதை பொருள் கடத்தல்: இருவர் கைது





# டெல்லியில் மழை: மாசு நீங்கி காற்றின் தரம் உயர்ந்துள்ளதால் மக்கள் நிம்மதி


| சென்னை / புதுக்கோட்டை | 11.11.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

அனுசுயா சாராபாய் , இந்தியாவின் பெண்கள் தொழிலாளர் இயக்கத்தின் முன்னோடி (பி.1885) (இ.1972)



அபுல் கலாம் ஆசாத் , இந்திய அரசியல்வாதி (பி.1888) (இ.1958)



ஆச்சார்ய கிருபளானி , இந்திய அரசியல்வாதி (பி.1888) (இ.1982)



கி. ஆ. பெ. விசுவநாதம் , தமிழறிஞர் (பி.1899) (இ.1994)



மரகதம் சந்திரசேகர் , இந்திய அரசியல்வாதி (பி.1917) (இ.2001)



## இன்றைய நினைவு நாள்

கப்டன் மயூரன் , தமிழீழ விடுதலைப் புலிப் போராளி (பி.1970) (இ.1993)



சத்தியவாணி முத்து , தமிழக அரசியல்வாதி (பி.1923) (இ.1999)



## தேசிய கல்வி தினம் (இந்தியா)